பக்கங்கள்: பத்து

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

துரித தபால் பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 தை 11 ஞாயிற்றுக்கிழமை (25-01-2004) தொலைபேசி - 2223378 ஒலி 37

# இந்திய அமைச்சர்களுடன் அமைச்சர் மிலிந்த சந்திப்பு

## பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து ஆராய்வு

(புதுடில்லி)

**இலங்கையின் தற்போதைய அரசியல் தளநிலைதொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் பொருட்டு அமைச்சர் மிலிந்த மொற கொட பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பிரதிநிதியாக இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு சென்று இந்தியத் தலைவர் களுடன் கலந்துரையாடியுள்ளார்.**

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டு முன்னணி ஏற்பட்டுள்ள நிலையிலும் மிலிந்த மொறகொட இந்தியா சென்றிருப்பது இலங்கை அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைப்பு ஈ.பி.டி.பிக்கும் அழைப்பு

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(லண்டன்)

அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் கொள்கை ரீதியில் இணக்கப்பாட்டுக்கு வந்து தேர்தலை எதிர் கொண்டால்இலங்கையின்அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் பெரும் சக்தியாக பரிணமிக்க முடியும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு குறித்து பி.பி.ஸி தமிழோசைக்கு நேற்று வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒன்றிணைந்து குரல் கொடுக்க முன்வருமாறு ஈ.பி.டி.பி உட்பட அனைத்துத் தமிழ்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். கடந்த காலங்களை மறந்து இனிவரும் காலத்தில் சக்திமிக்க அரசியல் அணியாக உருவெடுக்க முன்வருமாறு அழைத்திருக்கிறோம். அவர்களுக்கு யதார்த்தத்தை புரிய வைக்க வேண்டிய பொறுப்பு உங்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்-வந்த பயணிகள் வானை கடத்திச் சென்று கொள்ளை

(வட்டுக்கோட்டை)

கொழும்பிலிருந்து பயணிகளுடன் யாழ்.நோக்கி வந்த ஹயஸ் வானைக் கடத்திச் சென்ற கொள்ளையர்கள் ஒருலட்சத்து இருபதாயிரம் ரூபா பணத்தையும் பெறுமதி வாய்ந்த நகைகளையும் கொளளையடித்துள்ளனர். நேற்று அதிகாலை 1.30 மணியளவில் புத்தளம் பொலிஸ நிலையப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆயுதங்களுடன் வானை மறித்த கொள்ளையர்கள் நால்வர், வானைக் கடத்திச் சென்று இத்துணிகரக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தில் நாவற்குழி வாசி ஒருவர் 57 ஆயிரம் ரூபாவைப் பறிகொடுத்துள்ளார். (ந-59)

## ஹன்டர் வாகனம் மோதி இளம் பெண் மரணம்

(பருத்தித்துறை)

ஹன்டர் வாகனம் மோதியதில் இளம் பெண் ஒருவர் துடிதுடித்துப் பலியானார்.

இத்துயரச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் நெல்லியடி பேருந்து நிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் இமையாணன் கரணவாய் தெற்கைச் சேர்ந்த மகாலிங்கம் சாந்தினி (வயது 28) என்பவரே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சியிலுள்ள வணிக நிலையம் ஒன்றில் பணிபுரிந்த பிரஸ்தாப யுவதி கரணவாயிலுள்ள தனது வீட்டிற்குச் செல்வதற்காக கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு நெல்லியடி பஸ் நிலையத்தை வந்தடைந்தார்.

பஸ் நிலையத்தில் பஸ்ஸிற்காகக் காத்துக் கொண்டிருந்த பொழுது வீதியைவிட்டு விலகிய ஹன்டர் பிரஸ்தாப யுவதியை மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (த-52)

## இந்திய கடற்படைத் தளபதி விரைவில் இலங்கை வருவார்

(கொழும்பு)

இந்தியக் கடற்படைத் தளபதி வைஸ அட்மிரல் மத்வேந்திர சிங் விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வரும் மத்வேந்திரசிங், இலங்கைக் கடற்படைத் தளங்கள் பலவற்றுக்கும் சென்று அவற்றைப் பாரவையிடுவதுடன், திருகோணமலை கடற்படைத் தளத்துக்கும் செல்லவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய, இலங்கை கடற்பரப்பின் பாதுகாப்பு மற்றும் இவ்விடயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒத்துழைப்பு நடவடிக்கைகள் என்பன குறித்து இவ்விஜயத்தின் போது ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கடற்படைத் தளபதி ஆகியோரையும் இந்தியக் கடற்படைத் தளபதி மத்வேந்திர சிங் சந்தித்துப் பேசவுள்ளார். (ந)

## ஆசிரியர்களின் நிலுவைப் பணம்

## இனவாதிகளுக்கு உதவுவதை

## புலமைப் பரீட்சை பெறுபேறு

## ஆசிரியர்களின் நிலுவைப் பணம் வழங்க நடவடிக்கை

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் சம்பள நிலுவைப் பணமான 16 கோடி ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மனித வள அபிவிருத்தி, கல்வி, கலாசாரத்துறை அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார்.

இச்சம்பள நிலுவையை மாகாண சபைக் கல்வி அமைச்சின் சிபார்சுகளுக்கு அமைய வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# இனவாதிகளுக்கு உதவுவதை பிக்குகள் தவிர்க்க வேண்டும்

## தர்மகீர்த்தி தேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

இன்றைய சூழ்நிலையில் பௌத்த பிக்குகள் ஏனைய மதங்களின் தலைவர்களுடன் இணைந்து சக வாழ்வுடன் செயற்பட்டால் அப்பாவி மக்களை இனவாதிகளின் கோரப் பிடியில் இருந்து காப்பாற்ற முடியுமென்று தென்பிராந்தியத்தின் பிரதான சங்கநாயக்கர் தர்மகீர்த்தி தேரர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இனவாதிகளின் செயற்பாட்டுகள் குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

குறுகிய அரசியல் லாபம் கருதி ஒருசில அரசியல்வாதிகள்மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு பௌதத பிக்குகள் துணை போகக் கூடாது, இனவாதிகள் போடும் தாளங்களுக்கும் அவர்கள் பலியாகக் கூடாது.

இனவாதம் பேசும் அரசியல்வாதிகள் தங்களுடைய அரசியல் இலாபம் கருதி அப்பாவிப் பொது மக்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்லும் போது அவர்க

(10ஆம் பக்கம் பார்க்க)

பேசவுள்ளார். (ந)

## புலமைப் பரீட்சை பெறுபேறு எடுத்துவரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

5ஆம் தர புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றைய தினம் யாழ்.கல்வி வலயத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இப்பெறுபேறுகளை ஏனைய கல்வி வலயங்களையும் யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களையும் இன்று பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ந)

## கொழும்பு மஜிஸ்திரேட் நீதிவான் பதவி நீக்கம்

(கொழும்பு)

கொழும்பு மஜிஸ்திரேட் பிரதம நீதிவான் பதவியிலிருந்து நீதிபதி பி.பி.போயாகொடவை நீதிச் சேவை ஆணைக்குழு நீக்கியுள்ளது.

இப் பதவிக்கு மாலிகாவத்தை நீதிபதி சரோஜினி சுசில்வீரவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா கிறிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்கா சுமதிபால மீதான வழக்கு விசாரணைகளின் போது பக்கச்சார்பாக நடந்து கொண்டார் என இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நீதிச் சேவை ஆணைக்குழு நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையிலேயே கொழும்பு நீதிவான் பதவியிலிருந்து பி.பி. போயாகொட நீக்கப்பட்டுள்ளார்.(தி-60)

# இனப்பிரச்சினையை தீர்க்கவே ஸ்ரீ.சு.கட்சி–ஜே.வி.பி.கூட்டு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு பரந்த கூட்டணி ஒன்றை ஆரம்பிப்பதற்கான முதல்படியே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி- ஜேவிபி கூட்டணி என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இக் கூட்டணியினால் சமாதான முயற்சி பாதிப்படையும் என்ற கருத்தை மறுத்த ஜனாதிபதி தற்போதைய அரசியல் ஸ்திரமற்ற நிலையைப் போக்குவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டுமென கேட்டுக் கொண்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி- ஜே.வி.பி. கூட்டணி நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையையும் இனப் பிரச்சினையையும் தீர்ப்பதற்காகவே உருவாக்கபட்டதென ஜனாதிபதி செயலக அறிக்கை தெரிவிக்கின்றது.

சாதாரண மக்களுக்கு அனுகூலமான சந்தைப் பொருளாதாரமே தமது கூட்டணியின் பொருளாதாரக் கொள்கை என்றும் இதனால் உலகளாவிய ரீதியிலான தொழில் நுட்ப முன்னேற்றங்களை நாட்டில் ஏற்படுத்துவதற்கும், வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்கும் முடியும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# யுனிசெவ்வின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது

## தமிழ்ச்செல்வன் மறுப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தமது அமைப்பில் வயது குறைந்த சிறுவர்களைத் தொடர்ந்தும் இணைத்து வருவதாக அண்மையில் யுனிசெவ் நிறுவனத்தால் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு விடுதலைப்புலிகள் தமது மறுப்பைத் தெரிவித்துள்ளனர்.



மேற்படி குற்றச் சாட்டுகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களும், இதனால் எந்தவொரு அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருபவர்களுமான சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்களின் நலன்களைப் பேணும் வகையில், ஒட்டுமொத்தமான சிறுவர் நலன் தொடர்பான வேலைத்திட்டங்கள் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட இடைத்தங்கல் முகாமில் பல சிறுவர்கள் உள்ளனர். இதில் 15வயது வரையான சிறுவர்களும் உள்ளனர். இவர்களில் பலர் இங்கிருந்து கல்வி நிலையங்களுக்கும், சிறுவர் இல்லங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களின் விபரங்களை எமது விபரக் கோவைகளினூடாக அறிந்து கொள்ளலாம்.

அவ்வாறானவர்கள் மூலம் பெறப்பட்ட தரவுகளிலிருந்தே, விடுதலைப்புலிகள் தற்போது ஆயிரத்து 300 சிறுவர்களை இயக்கத்தில் இணைத்துள்ளனர் என யுனிசெவ் நிறுவனம் கூறிவருகிறது.

யுனிசெவ் நிறுவனம் இவ்வாறான பொய்க்குற்றச் சாட்டுக்களைப் பிரசாரம் செய்து வருவதானது, சர்வதேச மட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு உள்ள நன்மதிப்பைச் சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட ஒரு செயற்பாடேயாகும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

வயது குறைந்த சிறுவர்களைத் தமது இயக்கத்தில் இணைத்துக் கொள்வதில்லையென தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வெளியிட்டுள்ள மேற்படி மறுப்புத்தொடர்பாக யுனிசெவ் அமைப்பு கருத்து வெளியிடுகையில்,

வயது குறைந்த நிலையில், விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஆயிரத்து 187 சிறுவர்கள் பற்றிய விபரங்களைத் தருமாறு கடந்த வருடம் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி விடுதலைப்புலிகளிடம் நாம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

இச்சிறுவர்கள் பற்றி எம்மால் திரட்டப்பட்ட தகவல்கள் அனைத்தும் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சேகரிக்கப்பட்டவையாகும்.

எனவே, மேற்படி விடயங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதன் பின்னரும் கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையானதுமான காலப் பகுதிக்கு உரிமையாகும் என யுனிசெவ் குறிப்பிட்டுள்ளது.

(உ-18,62)

## நேட்டோவின் பேச்சாளராக இலங்கைத் தமிழர் நியமனம்

(கொழும்பு)


நேட்டோ நாடுகள் அமைப்பின் பேச்சாளராக ஜேம்ஸ் அப்பாத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.

பெல்ஜியத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் நேட்டோ நாடுகள் அமைப்பின் தற்போதைய தலைவரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஜாப் டி.ஹூப்ஸாபர் இந்த நியமனத்தை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

கனடாவில் வசிக்கும் இலங்கைத் தமிழரான இவர் முன்னர் நேட்டோ அமைப்பின் அரசியல் மற்றும் பாதுகாப்புச் செயலகத்தில் 1998ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றியுள்ளதுடன் கனடாவின் திட்டமிடல் மற்றும் உரை தயாரிப்பு பிரிவின் பிரதித்தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

மேலும் ரொறன்ரோவில் இயங்கும் சி.பி.சி. ஊடகத்தில் பணிபுரிந்ததுடன் கனடா பாதுகாப்பு அமைச்சின் ஒட்டவா கிளையில் கொள்கை திட்டமிடல் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-63)







## தேர்தலில் ஒன்றுபடுவது குறித்துப் பேச அமைச்சர் சந்திரசேகரன் கூட்டணிக்கு அழைப்பு

(கொழும்பு)

சகல சிறுபான்மை மக்களையும் ஓரணியில் திரட்ட வேண்டிய தேவை தற்போதைய சூழ்நிலையில் ஏற்பட்டுள்ளதால், மலையக மக்களையும் ஓரணியில் திரட்ட வேண்டிய அவசர தேவையை மலையக மக்கள் முன்னணி உணர்ந்துள்ளது.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பெ. சந்திரசேகரன், 20.01.2004திகதியிட்டு தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுச் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக்கடிதத்தில் மேலும்,

யுத்த நிறுத்தமும் சமாதானப் பேச்சுவார்த்தையும் கேள்விக்குறியாகிவிடுமோ என்ற நிலையில் இன்னொரு தேர்தலுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்ற அங்கத்துவ பலத்தை அதிகப்படுத்த சகல கட்சிகளும் வியூகம் அமைத்துக் கொண்டிருக்கின்ற போது சிறுபான்மைத் தமிழ் மக்களாகிய நாமும் அரசியல் ரீதியாக தீர்க்க தரிசனத்தோடு செயற்படவேண்டிய காலகட்டம் இது.



வடகிழக்கு மக்களோடும் மலையக மக்கள் கரம் கோர்த்துக் கொள்கின்ற புதிய வரலாற்றுத் திருப்புமுனைக்கான வாய்ப்பை உருவாக்குவது அவசியம் என்பதில் தங்களுடைய அமைப்பும் உடன்பாடு கொள்ளும் என்று நாம் நம்புகிறோம்.

இந்த அடிப்படையில் நாம் இணைந்து கலந்துரையாட வேண்டும் என மலையக மக்கள் முன்னணி கருதுகிறது.

இந்த நிலைப்பாட்டில் தங்களின் சம்மதத்தை தொலைபேசியினூடாகவாவது உறுதிப்படுத்தினால் உங்களுக்கு வசதியான திகதியை கலந்து பேசி சந்திப்பை இயன்றளவு உடனடியாக ஏற்படுத்திக்கொள்வோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## ஜனாதிபதியின் பதவிப் பிரமாணச் சிக்கல் உயர் நீதிமன்றம் வரை சென்றது

(கொழும்பு)


ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டு உத்தியோக பூர்வ பதவிக்காலத்துக்காக மூன்று தடவைகள் பதவிப் பிரமாணம் செய்து

தன்மையைத் தெளிவுபடுத்துமாறு கோரி சட்டத்தரணி வி.தர்மதாஸ கோமஸினால் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அவரது இரண்டு பதவிக்காலங்களுக்காக மூன்று தடவைகள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதாக அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தினால் ஏழு மாதகாலம் தமிழ் சுருக்கெழுத்துப் பயிற்சி வழங்கப்பட்டு, இம்மாதம் முதல் அரச அலுவலகங்களில் ஐந்து மாதகால செயன்முறை பயிற்சியை பெறத் தகுதி பெற்ற மாணவிகளையும், போதனாசிரியர்களையும் படத்தில் காணலாம்.



வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 18வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாகாண முகாமையாளர் பொ. இராமநாதன் மற்றும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டு உத்தியோக பூர்வ பதவிக்காலத்துக்காக மூன்று தடவைகள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதற்கான சட்டரீதியான தன்மையைத் தெளிவுபடுத்துமாறு கோரி சட்டத்தரணி வி.தர்மதாஸ கோமஸினால் கொழும்பு உயர்நீதி மன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டிற்குப்பின் ஜனாதிபதி அவரது இரண்டு பதவிக்காலங்களுக்காக மூன்று தடவைகள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதாக அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாகப் பல்வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டபோதும் இப்பதவிக்காலம் தொடர்பான சட்டத்தின் தன்மைகளை இந்த நீதிமன்றம் தெளிவுபடுத்தவேண்டும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுவைத் தாக்கல் செய்த சட்டத்தரணி தர்மதாஸ் கோமஸ் ஜனாதிபதியின் பதவிக் காலம் எப்போது முடிவுக்கு வருமென்று தீர்மானம் ஒன்றை வெளியிடுமாறு கேட்டுள்ளார். (ம)

# இந்திய கடற்படைத் தளபதி விரைவில் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்தியக் கடற்படைத் தளபதி வைஷ் அட்மிரல் மத்வேந்திரசிங் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரும் இவர், திருகோணமலை கடற்படைத் தளம் உட்பட பல கடற்படைத்தளங்களுக்கும் சென்று அவற்றைப் பார்வையிடவுள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பின் பாதுகாப்பு மற்றும் இந்த விடயத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய இந்திய ஒத்துழைப்பு நடவடிக்கைகள் குறித்தும் இவ்விஜயத்தின்போது இவர் ஆராயவுள்ளார்.

இவரது இந்த விஜயத்தின் போது இலங்கைக் கடற்படைத் தளபதி வைஷ் அட்மிரல் தயாசந்தகிரி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத் ஆகியோருடன் சந்திப்புக்களை நடத்தவுள்ளார். (தி-63)

## தடுப்பு மருந்தேற்றல்

(கொழும்புத்துறை)

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மருந்தேற்றல் நடவடிக்கை கடந்த 22ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரை இந்தப் பணி இடம் பெறும் என வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் க. வெங்கடாசலம் தெரிவித்துள்ளார். (உ-51)

## கோப்பாய் பி.செ.பிரிவில்

# தாய், தந்தையை இழந்த 965 மாணவர்கள் உள்ளனராம்

(இருபாலை)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தாய், தந்தையை இழந்த 965 மாணவப் பராயத்தினர் இருப்பது புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தாய், தந்தை ஆகிய இருவரையும் இழந்த 55 மாணவர்களும் தந்தையை இழந்த 706 மாணவர்களும் தாயை இழந்த 169 மாணவர்களும் இப்பகுதியில் தமது கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர்.

இதேவேளை, தந்தையைப் பிரிந்து வாழ்கின்ற 35 மாணவர்களும் இனம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்தம் அதனால் ஏற்பட்டவறுமை, மற்றும் மறுமணம் புரிதல் போன்றவையே இத்தொகையில் பெரும் தாக்கம் செலுத்தியிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. (உ-84)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

25

## முதலாம் பகுதி

## தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

### இறைசுவதோர்

இறைசுவதோர் என்னும் பதவிப் பெயர் போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் வழக்கில் வந்தவொன்றாகும். அரசாங்க வரிகளைச் சேர்க்கும் பொறுப்பு அவர்களுடையதாகும். முதலியார் என்ற பதவிக்குரியவர்கள் சில சமயங்களிலே இறைசுவதோர் என்னும் பதவிப் பெயரையும் பெற்றிருந்தனர். யாழ்ப்பாணத்திலே மிகவுஞ் செல்வாக்குப் பெற்றிருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இப்பதவியைப் பெற்றிருந்தனர். 17ஆம் நூற்றாண்டின் முடிவிலே பதவி பெற்றிருந்த இறைசுவதோர் பலர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோராவர். கன்னங்கராய் என்னும் ஊரைச் சேர்ந்த தொம்பிலிப்பு சங்கரப்பிள்ளை அவர்களிற் பிரதானமானவர். அவரின் மைத்துனரான முதலித்தம்பி வடமராட்சியில் இறைசுவதோராக நியமனம் பெற்றிருந்தார். சங்கரப்பிள்ளையின் சகோதரர் முறையினரான மண்டலநாயக முதலியார் தென்மராட்சிக்குப் பொறுப்பான இறைசுவதோராகக் கடமை புரிந்தார். இவர்கள் நிர்வாகத்திலுள்ள பிரதான பதவிகளைத் தங்கள் உறவினருக்குப் பெற்றுக் கொடுத்தார்கள் என்றும் வரிகள் தொடர்பான பல மோசடிகளுக்குப் பொறுப்பாக இருந்தார்களென்றும் உலாந்தாக்கார அதிகாரிகள் முறைப்பாடு செய்தனர்.

அரசினருக்குரிய தலைவரி, நிலவரி, வாரம், இனவரி (தொழில்வரி) அதிகாரி வரி என்பவற்றைக் குடியானவர்களிடமிருந்து சேகரிப்பதோடு அவர்கள் அரசாங்கத்திற்குச் செய்யவேண்டிய ஊழியம் என்னுஞ் சேவையினையும் நடத்துவிக்க வேண்டும். வடமராட்சி முதலான மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் பல பண்டாரப்பிள்ளைகளை நியமித்தனர். மாகாணத்தின் சுற்றளவு, அதன் சனத்தொகை ஆகியவற்றுக்கு ஏற்றவாறு நியமனம் பெறும் பண்டாரப்பிள்ளைகளின் தொகை அமைந்திருக்கும். 17ஆம் நூற்றாண்டின் முடிவிலே வடமராட்சியில் 6 பண்டாரப் பிள்ளைகளும், பச்சிளைப்பள்ளியில் 4 பண்டாரப்பிள்ளைகளும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

குடியானவர்களிடமிருந்து வரிகளைச் சேர்ப்பதற்காக ஊர்களுக்குப் போகுமிடத்துப் பண்டாரப்பிள்ளைகள் உடையார், தலையாரி ஆகிய தலைமைக்காரரைக் கூட்டிக்கொண்டு போவது வழக்கம். வரி கொடுபடாதவிடத்து நாட்டு வழமைப்படி குற்றம் புரிந்தவர்களின் உடைமைகளை அபராதமாக எடுத்துக் கொள்வர்.

இறைசுவதோர், பண்டாரப்பிள்ளைகள் ஆகியோருக்கு அரசாங்கக் கணக்கிலிருந்து வேதனம் வழங்கப்படுவதில்லை. ஆயினும், வழமைப்படி குடியானவர்கள் இறுக்கும் வரிகளின் முழுத்தொகையின் ஒரு வீதமளவு பணத்தை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். இந்தக் கட்டணத்தைக் குடியானவர்கள் வரிக்கு மேலதிகமாகச் செலுத்த வேண்டும். இப்படி அதிக பணம் சேருவதில்லை. வடமராட்சியில் 25 இறையாலும் **(Rix-dollars)** பச்சிலைப்பள்ளியில் 12 இறையாலும் வருடமொன்றுக்குக் கிடைத்தன. இச் சிறிய தொகைப் பணத்தையே இறைசுவதோரும் பண்டாரப்பிள்ளைகளும் அவர்களின் கையாட்களும் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

### கண்காணி

தமிழரசர் காலத்தில் வழக்கிலிருந்த பதவிப் பெயர்களிற் கண்காணி என்பதும் ஒன்றாகும். போர்த்துக்கேயரின் ஆவணங்கள் சிலவற்றிலே அதனைப் பற்றிய குறிப்புண்டு. அப்பதவியினைக் கொண்டிருந்தவர்களின் கடமைகள் ஊர்மட்டத்தில் அடங்கியவை என்று அனுமானித்துக் கொள்ளலாம். உலாந்தாக்காரரின் ஆவணங்களிலே அவர்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படவில்லை.

தென்னிந்தியச் செல்வாக்கின் விளைவாகவே கண்காணி என்னும் பதவிப் பெயர் இலங்கையிலே பயன்படுத்தப்பட்டது. சோழர் காலத்துக் கல்வெட்டுக்களில் புரவு வரித் திணைக்களத்துக் கண்காணி என்ற சொல் நிலவரி பற்றிய கணக்குகளை பரிசோதனை செய்யும் துறையினையும் அதிலே சேவகம் புரியும் ஊழியரையும் குறிக்கிறது. சில சாசனங்களில் "நாட்டுக் கண்காணி நாயகம் செய்வோர்" என்ற மொழித் தொடர் வருகின்றது. இதில் "கண்காணி" என்பது நில அளவை, வரி மதிப்பீடு ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் சேவைகளைக் குறிக்கின்றது. வேறு சில சாசனங்களில் "கண்டு கண்காணிச்சு மேல்வாரம் கொள்ளக் கடவதாகவும்" என்ற தொடர் நிலங்களைச் செவ்வனே மதிப்பிட்டு அரசனுக்குரிய பங்கினைச் சேர்க்க வேண்டும் என்ற பொருளைத் தருகின்றது. எனவே கண்காணித்தல் என்ற பதம் வரி மதிப்பீட்டையும், கண்காணி என்னும் சொல் அம்மதிப்பீட்டை நடத்திய ஒருவரையும் குறிக்கின்றன என்பது உணரப்படும். இதனால் யாழ்ப்பாணப் பட்டினத்துக் கண்காணிகளும் இறைவரி நிர்வாகத்திலே கடமை புரிந்தவர்கள் என்று கொள்ளலாம்.

கணக்கப்பிள்ளை என்போர் வரவு செலவு பற்றிய கணக்குகளுக்குப் பொறுப்பாக இருந்ததோடு இலிகிதர்களாகவும் கடமை புரிந்தார்கள். 17ஆம் நூற்றாண்டிலே ஒரு சமயத்திலே வடமராட்சியில் இறைசுவதோராயிருந்த ஒருவரை கொம்மாந்தரின் கணக்கப்பிள்ளையாக நியமித்தார்கள். " கோட்டை வாசற் கணக்கப்பிள்ளை " என்ற ஒரு பதவியும் இருந்தது.

### உடையார்

உடையார் என்னும் பதவிப் பெயர் யாழ்ப்பாணத்திலும் வன்னிப் பிரதேசத்திலும் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ளது. தென்னிந்தியாவிலே அது நெடுங்காலமாக வழக்கிலிருந்தது. உடையவன், கிழான், தலைமகன் எனும் பொருள்களைக் குறிக்கும் பதமாக அது கொள்ளத்தக்கது. கோயிற் சாசனங்களில் மூலஸ்தான மூர்த்தியை உடையார் என்று குறிப்பிடுவது வழக்கம். கிராமத் தலைவர் முதலாக முடிமன்னர் வரை பல்வேறு நிலையில் அதிகாரஞ் செலுத்தியவர்களை உடையார் என்று தமிழகத்திலும் கர்நாடகத்திலும் குறிப்பிட்டனர். இலங்கையைப் பொறுத்தவரையில் உடையார் என்பது கிராமத் தலைவரான தலையாரிக்கு சற்று மேலான நிலையினைக் குறிக்கும் பதவிப் பெயராகும்.

(தொடரும்)

**வலம்புரியின் அனுசரணையுடன்**

வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

**கவிதைப் போட்டி -2004**

**1ம் பரிசு தங்கப் பதக்கம்**
**2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்**
**3ம் பரிசு வெண்கலப் பதக்கம்**
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
**"தமிழா உனக்கேன் இக்கதி"**

**விதிகள்**

- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

**உங்கள் கவிதைகளை**
**கவிதைப்போட்டி-2004**
**வலம்புரி**
**இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**

அலுவலகப்பாவனைக்கு

முழுப்பெயர்..........................
..........................
தபால் முகவரி..........................
..........................
பிறந்த திகதி..........................
தே.அ.அ. இல ..........................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

..........
திகதி
..............................
போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை
இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

................
திகதி
..............................
போட்டியாளர்கையொப்பம்

# அகிலத்தில் அமைதி நிலவ அன்பே அடிப்படை வழியாகும்

**யாழ். ஸ்ரீ.சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று நடைபெறும் அன்பு வார ஒன்று கூடல் நிகழ்வைச் சிறப்பிக்கும் வகையில் இக் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

இன்று உலகில் மனித உயர் குணங்கள் வலுவிழந்து அவ்வுயர் பண்புகளை பின்பற்றுதல் அல்லது கடைப்பிடித்தல் கௌரவக் குறைவானதாக அல்லது நாகரீக மற்றதாக கருதப்படுகிறது. ஆனால இன்று உலகில் காணப்படுகின்ற அமைதியற்ற தன்மைக்கும் ஒழுக்கமற்ற வாழ்க்கை முறைக்கும் காரணமாக இருப்பது ஆதிகாலம் தொட்டு மதிப்பாக கருதப்பட்ட மனித உயர்குணங்களை இதய பூர்வமாக பீன்பற்றாது விட்டமையே ஆகும். இன்று காணப்படுகின்ற அமைதியற்ற தன்மை வரும் காலத்தில் இன்னும் பல் மடங்காக அதிகரிக்க கூடிய தன்மையே காணப்படுகிறது. எனவே வருங்காலத்தில் அமைதி தோன்றிட உலகில் வாழுகின்ற நாம் ஒவ்வொருவரும் வலுவிழந்து போன மனித உயர் பண்புகளான உண்மை, அன்பு, நல்ல நடத்தை, பணிவு போன்றவற்றை பின்பற்றுபவர்களாகவும், உலகிலே வாழுகின்ற மற்றவர்களோடு தமது வளங்களை பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்கு (**sharing mentality**) உடையவர்களாகவும் துன்பப்படுவோருக்கு உதவும் மனம் உடையவர்களாகவும் பெறுமை உடையவர்களாகவும் இருந்தால் தான் அமைதியான உலக வாழ்வை எதிர்பார்க் கலாம்.

### உயர் குணம் வேண்டும்

அத்தோடு எதிர்கால சந்ததியினர் வளமான வாழ்வு வாழ வேண்டுமென்றால் இன்று பெற்றோர் ஒவ்வொருவரும் பெற்றோராகப் போகிறவாகள் ஒவ்வொரும் மனித உயர் குணங்களை தமது வாழ்க்கையில கடைப்பிடிக்க வேண்டும். அத்தோடு தமது பிள்ளைகளிற்கு தாம் வாழுகின்ற வாழ்க்கை முறை முன்மாதிரியாக அமைய வேண்டும். ஏனெனில் பிள்ளைகள் எங்கள் ஆலோசனைகளை கேட்பதிலும் பார்க்க எமது நடத்தையை மிக அவதானமாக கவனிக்கிறார்கள் நாம் பின்பற்ற வேண்டிய உயர்குணங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமானதும அடிப்டையாக விளங்குவதும் அன்பு ஆகும். நாம் இந்த புனிதமான, உறுதியான தன்னலமற்ற அனபைப் பற்றி அறிதல் பயனுள்ளதாகும்.

### அன்பேசிவம்

சமயஙகள் அன்பேசிவம், அன்பே தெய்வம் என்று இறைவன் அன்புமயமானவர் என வர்ணிக்கின்றன. விஞ்ஞானம் ஆரம்பத்தில் அன்பு எனபது ஓர் மன எழுச்சி (**Emotion**) எனறு விளக்கியது ஆனால் இன்று அன்பு என்பது ஓர் எழுச்சியல்ல என்றும் அது ஓர் உயர்ந்த நுண்ணிய பலம் வாய்ந்த சக்தி என்றும் பரிசோதனைகள் மூலமாக தெரிவிக்கின்றது.

சமயங்களின் கருத்தான அனபே தெய்வம் என்பதையும் ஆழநது நோக்கினால்-இறைவன் சர்வ வல்லமை பொருந்தியவர் என்றால் அன்பும் சர்வ வல்லமை பொருந்தியது என்பது தெளிவாகும். தூய தன்னலமற்ற அன்பு மிக உயர்ந்த அதிர்வுகளை எம்மிலே உற்பத்தி செய்யக் கூடிய சக்தி வாய்ந்தது, அத்தகைய அன்பை எம்மிலே நிறைத்துக் கொண்டால் அது எம்மில் இருந்து எப்பொழுதும் புனிதமான அதிர்வுகளாக வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். அன்பு நிறைந்தவர்களில் இருந்து வெளிப்படும் சக்தி மிக்க அதிர்வுகள் எதிரிகளை நண்பர்களாக்கக் கூடிய சக்தி வாய்ந்தது. தீய செயல்களையுடையவர்களை நல்ல நடத்தை உடையவாகளாக மாற்றக் கூடிய தன்மை கொண்டது. ஓர் மனிதனின் இதயத்தை மிக மென்மையானதாக மாற்றக் கூடியது. நாம் இந்த உலகிலே ஆயுதங்களினால் அல்லது பலாத்காரத்தினால் அமைதியை ஏற்படுத்த முடியாது. அன்பு தான் இவ்வுலகிலே அமைதியை ஏற்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்தது.

### அன்பின் வலிமை

அன்பு எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை பின்வரும் சம்பவம் தெளிவாக்குகிறது. யோசேப்ஸ்ராலின் எனபவர் ரஷ்ய நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர். பயங்கரமான சர்வாதிகாரியாக விளங்கியவர். அமெரிக்காவே அவரது செற்பாடுகளை கண்டு அமைதியற்று இருநதது. பிற்காலத்தில் இந்திய ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராதாகிருஸ்ணன் அப்பொழுது ரஷ்யாவில் இந்தியத் தூதுவராக சென்றிருந்தார். அவர் ஓர் தத்துவமேதை என்பது யாவரும் அறிந்ததே இவர் இருமுறை ஸ்ராலினை சந்திக்க முடிந்தது. முதல் முறை பதவி ஏற்று ரஷ்யா சென்ற போது. இரண்டாவது முறை பதவி விலகி இந்தியா திரும்பிய போது. இரண்டாவது முறை ஓர் பிரியாவிடை சந்திப்பாக இருந்தது. இச்சந்திப்பு முடிந்ததும் டாக்டர் ராதாகிருஸ்ணன் மற்றவர்கள் எவரும் செய்யத் துணியாத ஓர் செயலை அன்போடு செய்தார். ஸ்ராலினின் முதுகிலே அன்புடன் தட்டி "உங்களில் கவனம் எடுத்துக் கொள்ளுங்கள் எல்லாம் நன்றாக நடக்கும் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்" என்று குடும்ப பாசத்தோடு கேட்டு விட்டு திரும்பத் தொடங்கினார். அபபொழுது விக்கி, விக்கி, அழும் சத்தம் கேட்டது டாக்டர் ராதாகிருஸ்ணன் அவர்கள் நின்று "ஏதாவது தவறாக சொல்லிவிட்டேனா" என்று கேட்டார். அதற்கு ரஷ்ய ஜனாதி பதி கண்ணீரை துடைத்துக் கொண்டு "நீங்கள்தான் முதல் முதல் என்னை மனி தனாக மதித்து அன்போடு இவ்வாறு நடந்து கொணடவர்." என்று கூறினார். ஸ்ராலின் தனது ஆரம்ப வாழ்க்கையில் இத்தகைய அன்பைப் பெற்றிருந்தால் எவ்வ ளது சிறந்த ஆட்சியாளராக விளங் கியிருப்பார். எவ்வளவு அம்மதியை உலகில் ஏற்படுத்தியிருப்பார்.

### அன்பின் முக்கியத்துவம்

எனவே அன்பு என்பது வாழ்க்கையில் மிக முக்கியமானது. ஆகவே அன்பு என்ற விதையை அன்பற்றவர் இதயங்களில் விதைக்க வேண்டும். அதற்கு அன்பு என்ற நீரை பாய்ச்ச வேண்டும். இந்த உலகில் அன்பு வெள்ளமாக பெருகி எல்லோருரையும் சென்றடைய வேண்டும் நாம் ஒவ்வொருவரும் இந்த தன்னலமற்ற அன்பை அவிபிருத்தி செய்து கொள்ள வேண்டும். நாம் அன்பு செலுத்தும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்க, அதிகரிக்க நமது ஆனந்தமும் அதிகரிக்கும். நாம் குறைவான மக்களை நேசிக்கும்போது ஆனந்தமும் குறைவானதாகவே இருக்கும். எனவே எங்கள் ஆனந்தம் பெருக வேண்டுமானால் நாங்கள் நேசிக்கும் மக்களின் எண்ணிக்கையை பெருக்க வேண்டும்.

இந்த தன்னலமற்ற அன்பை எமது உள்ளத்திலே வளர்க்க தடையாக இருப்பது சுய நலமும், நான் என்ற அகங்காரமும் (**Ego**) தான் இவை அதிகரித்து காணப்படுகின்ற இதயத்திலே அன்பை வளர்க்க முடியாது. எனவே சுய நலத்தை தியாகம் செய்து பிறர் நலத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். சுயலாபமும், சுயநலமும் மனிதனிடம் குடி கொண்டுள்ளவரை அன்பு என்ற ஒளியை இதயத்திலே வளர்க்க முடியாது.

**K.V.சிவனேசன்**
சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி இணைப்பாளர்

சுவையான உணவுகளை தயாரிப்பதால் மட்டும் பசியடங்காது. அவற்றை உண்ட பிறகுதான் பசியடங்குகிறது. ஆகவே தெரிந்து கொள்ளுதல் சமையல் செய்வதற்கு ஒப்பானது. கடைப்பிடிப்பதே உண்பதற்கு ஒப்பாகும். எனவே நாம் ஒவ்வொருவரும்,

**"அன்போடு நாளினை தொடங்கிடுக**
**அன்போடு நாளினை செலவு செய்க**
**அன்பினால் நாளினை நிரப்பிடுக**
**அன்பினால் நாளினை நிறைவு செய்க"**

**பாபா.**

இதுவே அன்பாக நாம் மாற வழியாகும் அன்பாக நாம் மாறினால் அகிலத்தில் அமைதியை நிலை நாட்டிடலாம். □

## பொது நூலகத்தை திறக்குமாறு புளொட் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடுமாறு புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர்

தங்களது அனுமதி தேவை எனத் தெரிவித்திருந்தார்.

எனது கட்சிகள் சார்பிலும் பொதுமக்கள், மாணவர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் சார்

## சட்டவாளர்களுக்கு பட்டமளிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ சட்டக்கல்லூரியில் கற்று வெளியேறிய புதிய சட்டவாளர்களுக்கான பட்டமளிப்பு விழா இன்று இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ நீதிமன்றக் கட்டடத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் சட்ட

## சமய அறிவுப் பரீட்சையும் செயல் முறைப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், பாடசாலை

மார்ச் 6 ஆம் திகதிகளிலும், செயல் முறைப் போட்டிகள் எதிர் வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகத்தை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடுமாறு புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். இருதயராஜன், வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனவைக் கோரியுள்ளார்.

இது விடயமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

கடந்த காலப் போர் நடவடிக்கைகளால் அழிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தை புனரமைத்து திறந்து வைக்கவேண்டுமென யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் ஏக மனதாகத் தீர்மானித்தார்கள்.

இதன் பிரகாரம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆகியன அளித்த உதவியுடன் நூலகம் புனரமைக்கப்பட்டு தளபாட வசதிகளும் செய்யப்பட்டன.

முன்னாள் யாழ். மாநகர் முதல்வர் கந்தன் செல்லையன் கடந்த 2003 பெப்ரவரிமாதத்தில் இதனைத் திறந்து வைக்க விரும்பினார் யாரென்று தங்களை உறுதி செய்ய முடியாத சில அமைப்புகள் வேலைகள் அனைத்தும் பூர்த்தியாவதற்கு முன் அதனைத் திறக்கக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்தன.

இப்பொழுது கட்டட வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்து விட்டது. நவீன மயமாகப்பட்ட கனணி அமைப்புடன் கூடிய இந்நூலகத்தில் பணிபுரிய தகுதி வாய்ந்த பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

நூலகத்தை திறப்பது குறித்து யாழ். மாநகரசபை ஆணையாளருடன் நாங்கள் பேசிய போது, இதனை திரும்பத் திறப்பதற்கு தங்களது அனுமதி தேவை எனத் தெரிவித்திருந்தார்.

எனது கட்சிகள் சார்பிலும் பொதுமக்கள், மாணவர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் சார்பிலும், நலன் விரும்பிகள் சார்பிலும் தேவையான பணியாளர்களை நியமிப்பதற்கான அதிகாரத்தை மாநகர ஆணையாளருக்கு வழங்குவதுடன், யாழ். நூலகத்தை திறப்பதற்கான அனுமதியையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

வாளர்களுக்கான பட்டமளிப்பு விழா இன்று இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ நீதிமன்றக் கட்டடத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் சட்டபடிப்பினை நிறைவு செய்துள்ள 4வது தொகுதி சட்டக்கல்லூரி மாணவர்களுக்கே பட்டமளிக்கப்படவுள்ளது.

சட்டவாளர்களாக பட்டம் பெற்று வெளியேறும் இவர்கள் தமிழீழ மாவட்ட நீதிமன்றங்கள் மேல் நீதிமன்றங்களில் கடமையாற்றவுள்ளனர். (உ-4)

## யுத்த நடவடிக்கைகளால்

# ஒரு இலட்சத்து 15 ஆயிரம் விவசாயிகள் தொழிலுக்கு முழுக்கு

(திருநெல்வேலி)

கடந்த காலங்களில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக யாழ். குடாநாட்டிலுள்ள 1 இலட்சத்து 15 ஆயிரம் விவசாயிகள் தமது தொழிலை இழந்துள்ளனர்.

அண்மையில், யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலவுரிமை அமைப்பு நடாத்திய கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே இவ் விபரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் இங்கு இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் மற்றும் இராணுவ உயர் பாதுகாபபு வலய நடைமுறைகள், உள்ளிட்ட மற்றும் பல காரணங்களால் விவசாயிகள் தமது தொழிலை மேற்கொள்ளாமல் முடங்கி இருப்பதுடன், இவர்கள் வேறு தொழில் வாய்ப்புத் தேடி அலைந்து திரிவதுடன், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்க்கை நடாத்திவரும் துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியுள்ளமையும மேற்படி கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. (உ-43)

## விபரங்கள் திரட்டல்

(இருபாலை)

உளஜூர் அரசசார்பற்ற நிறுவனமான, இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விதவைகள் மற்றும் தாய்,தந்தையை இழந்த மாணவர்களது விபரங்களைத் திரட்டிவருகின்றது.

இவர்களுக்கான உதவு திட்டங்களை அமுல்படுத்தும் வகையிலேயே இவ் விபரங்கள் திரட்டப்பட்டுவருகின்றன. (உ-84)

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், பாடசாலை மாணவர்களுக்கிடையே சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு கடந்த 50 வருட காலமாக நடாத்தி வரும் சைவசமய அறிவுப்பரீட்சை மற்றும் செயல் முறைப் போட்டி ஆகியவற்றை இம்முறையும் நடாத்தவுள்ளது.

சைவசமய அறிவுப்பரீட்சை, தரம்-1 தொடக்கம் தரம்-13 வரையிலான மாணவர் மட்டத்திலும், கோலம் போடுதல்,மாலைகட்டுதல், தோரணம்பின்னுதல் ஆகிய செயல் முறைப் போட்டிகள் வயது வேறுபாடின்றி சகலரும் பங்குபற்றும் வகையிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சைவசமய அறிவுப்பரீட்சை எதிர் வரும் பெப்ரவரி மாதம் 29 ஆம் மார்ச் 6 ஆம் திகதிகளிலும், செயல் முறைப் போட்டிகள் எதிர் வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி பெப்ரவரி3 ஆம் திகதியாகும .

பரீட்சையிலும், போட்டிகளிலும் முதல மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கான பரிசுகள் மார்ச் மாதம் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொன்விழா நிகழ்வில் வழங்கப்படும்.

மேற்படி பரீட்சையிலும், போட்டிகளிலும் பங்குபற்ற விரும்புபவர்கள், "சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம்" 163,நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு விபரங்களை பெற்றுககொள்ளலாம் என கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (உ)

# திலங்க சுமதிபாலவின் பதவிகள் பறிபோகும்?

(கொழும்பு)

தற்போது தடுப்புக்காவலிலுள்ள திலங்க சுமதிபாலவை அவரது தற்போதைய பதவிகளிலிருந்து அகற்றப்படவேண்டுமென்று கோரப்படவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியின் கிழுள்ள தபால், தொலைத் தொடர்பு அமைச்சின் வேண்டு கோளுக்கிணங்க திலங்க சுமதிபால தொடர்பான சி.ஐ.டி யின் அறிக்கை உட்பட சகல ஆவணங்களையும் சட்டமா அதிபர் இவ்வமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜாவிடம் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரெலிகொம் மற்றும் இலங்கை கிரிக்கெற் கட்டுப்பாட.டுச் சபை ஆகியவற்றின் தலைவராக இவர் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-6)

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களில்லை இருந்தால் கண்டு பிடித்துக் காட்டவும்

## புஷ் நிர்வாகத்துக்கு ஆயுதசோதனைக் குழுத் தலைவர் சவால்

(நியூயோர்க்)

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் எவையும் இல்லையென்றும் அவ்வாறு இருந்தால் அவற்றைக் கண்டு பிடித்துக் காடடுமாறும் ஆயுதப் பரிசோதனைக குழுவின் தலைவர் டேவிட்ஹே புஷ் நிர்வாகத்திற்கு நேரடிச் சவால் விடுத்துளளதுடன் தனது பதவியையும் இராஜினாமாச் செய்துள்ளார்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் அமெரிக்கப் பரிசோதனைக்குழுவின் தலைவராக டேவிட்ஹே நியமிக்கப்பட்டிருந்தார்.

அங்கு பரிசோதனைகளை மேற்கொண்ட அவர் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்பதை உறுதிசெய்துள்ளார்.

அவ்வாறு இருந்தால் அவற்றைக் கண்டு பிடித்துக் காட்டுமாறு டேவிட்ஹே புஷ்நிர்வாகத்துக்கு நேரடி சவாலை விடுத்துள்ளார்.

டேவிட்ஹே பதவியை இராஜினாமாச் செய்ததையடுதது அவருக்குப்பதிலாக ஷால் டியூபர் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் சர்வதேச ஆயுதப்பரிசோதனைக் குழுவில் அங்கம் வகித்த டியூபரும் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்று கூறி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஒன்றை எதிர்நோக்கியுளள அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷிற்கு இவ்வாறான நடவடிக்கைகள் பெரும் சிக்கலைத் தோற்றுவித்துளளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஈராக்கில் ஆயுதப் பரிசோதனைகளை மேற்கொண்ட பிரிட்டனைச்சேர்ந்த டேவிற்ஹெலி என்ற விஞ்ஞானியொருவர் கடந்த வருடம் மர்மமான முறையில் மரணமடைந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (து-2)

உலக தரிசனம்



புது டில்லியில் நடைபெறவிருக்கும் குடியரசு தின விழா அணிவகுப்பில் இடம்பெறவுள்ள ஆகாஷ் ஏவுகணை.

# அணுவாயுத தடை ஒப்பந்தங்களுக்கு வடகொரியா பெரும் அச்சுறுத்தல்

## சர்வதேச அணுசக்தி மைய தலைவர் தெரிவிப்பு

(நியூயோர்க்)

சர்வதேச அணுசக்தி மையத்தின் அணுவாயுதத் தடை ஒப்பந்தங்களுக்கு வடகொரியா பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக சர்வதேச அணுசக்தி மையத் தலைவா மொஹமட் எல்பரடே தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்று வரும் உலகப்பொருளாதார மாநாட்டில் இதனைத் தெரிவித்த மொகமட் எல்பரடே தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்.

சர்வதேச அணுசக்தி நிறுவனத்துடன் அணுவாயுதத் தடை ஒப்பந்தத்தில் முன்னர் கையெழுத்திட்டிருந்த வட கொரியா அந்த ஒபபந்தத்தில் இருந்து தான் விலகிக கொள்வதாக சில மாதங்களுக்கு முன்னர் அறிவித்தது.

இதனை அடுத்து அமெரிக்கா உட்பட பலநாடுகள் வடகொரியாவை கடுமையாக விமர்சித்ததுடன் அணு உற்பத்தித் திட்டங்களைக் கைவிடுமாறு வலியுறுத்தி வந்தன. இதனை வட கொரியா இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

வடகொரியாவின் இந்த நிலைப்பாடு மேலும் தொடர்ந்து நீடிக்குமானால் சர்வதேச அணுசக்தி மையத்துடன் ஏனைய நாடுகள் செய்துகொள்ளவிருக்கும் ஒப்பந்தங்களுக்கு வட கொரியா பாரிய அச்சுறுத்தலாக அமையவுள்ளதென அவர் கூறினார். (து-9)

## ஸ்பிரிட் விண்கலத்திற்கும் பூமிக்கும் இடையிலான தொடர்பு துண்டிப்பு

### காரணமறிய விஞ்ஞானிகள் முயற்சி

(வாஷிங்டன்)

அமெரிக்க நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையம் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பிய ஸ்பரிட் விண்கலத்தினுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்பிரிட் விண்கலத்தின் கணனி மென்பொருட் பகுதியில தவறுகள் இடம்பெற்று இருக்கலாம் என்று அமெரிக்க நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் கணனியின் மென்பொருள பகுதில தவறுகள் ஏற்பட்டால் அதனை நிவர்த்தி செய்வது கடினமென நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில உணமைக் காரணததைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்

இதேவேளை, அமெரிக்க நாஸா விண்வெளி ஆராயச்சி மையத்தினால் செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட மொப்ஜென்ஸி விண்கலம இன்று தரை இறங்கவுள்ளது.

இந்த விண்கலம் ஸ்பிரிட் விண்கலம் தரை இறங்கிய பகுதிக்கு நேர் எதிர்ப பகுதியில் செவ்வாய்க் கிரகத்தின் அடுத்த பக்கத்தில் தரை இறங்கவுள்ளது. (து-9)

## ஈராக்கில் ஹெலி விபத்து 2 இராணுவத்தினர் பலி

(பக்தாத்)

ஈராக்கின் தென்பகுதியில் அமெரிக்க ஹெலிகொப்ரர் ஒன்று விபத்திற்குள்ளானதில் அதன் விமானிகள் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் மேற்படி ஹெலிகொப்ரர் தரையிறங்கும் போதே இந்த விபத்து நேர்ந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

விபத்திற்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் விசாரணைகள் தொடருவதாகவும் அமெரிக்க இராணுவத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (து-2)

## பழநெடுமாறனின் பிணை மீதான தமிழக அரசின் மேன்முறையீட்டை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறனுக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய பிணை உத்தரவை எதிர்த்து உச்சநீதிமனறத்தில் தமிழக அரசு தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனுவை உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்துள்ளது.

விடுலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாககூறி தமிழக அரசு நெடுமாறனை கடந்த வருடம் பொடாச்சட்டத்தின்கீழ் கைதுசெய்திருந்தது.

இவ்வழக்கில் அண்மையில் சென்னை உயர்நீதிமன்றத்தால் நெடுமாறனுக்கு பிணை வழங்கப்பட்டது.

இந்த பிணை உத்தரவை எதிர்த்து தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமனறத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இதை நேற்று முன்தினம் விசாரணை செய்த உச்ச நீதிமன்றம் இம்மனுவைத் தள்ளுபடி செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது. (து9)

## கனேடியப் பிரதமரின் அழைப்பை உடன்ஏற்றார் கோபி அனான்

(பெர்ன்)

கனேடியபபிரதமர் போல் மார்டீன் விடுத்த அழைப்பை ஏற்று எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபிஅனான் கனேடிய நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

சுவிட்ஸர்லாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலகப் பொருளாதார ஒன்றியத்தின் உச்சிமாநாட்டில் கலந்து கொண்டபோதே கனேடியப் பிரதமர் போல் மார்ட்டீன், ஐக் கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு இந்த அழைப்பினை விடுத்திருந்தார்.

இவரின் அழைப்பினை உடனடியாக ஏற்றுக்கொண்ட ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் எதிர்வரும் மார்ச் மாதம் கனடாவுக்கு விஜயம் செய்வதாக உறுதியளித்துள்ளார்.


இந்த விஜயத்தின்போது ஐ.நா. சபையின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு கனடாவின் பங்களிப்பு குறித்து விரிவாக ஆராய முடியுமென கனடாவின் பிரதமர் போல் மார்ட்டீன் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, கடந்த 50ஆண்டு கால வரலாற்றில் கனேடிய நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ள முதலாவது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் என்ற பெருமையை கோபி அனான் பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது (து-9)

## தடைவிதிக்கக் கோரிக்கை

இஸ்லாமிய அறக்கட்டளை நிறுவனமான அல் அமேனியாவிற்குத் தடை விதிக்க வேண்டும் என்று

## ஈரானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்-கெய்டாவினரை வெளியேற்றுக!



(து-2)

## தடைவிதிக்கக் கோரிக்கை

இஸ்லாமிய அறக்கட்டளை நிறுவனமான அல் அமேனியாவிற்குத் தடை விதிக்கவேண்டும் என்று சவுதி அரேபியாவை அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த அமைப்பிற்குப் பாகிஸ்தான், இந்தோனேஷியா, கின்யா, தன்ஷானியா ஆகிய நாடுகளில் கிளைகள் உள்ளதாகவும், இந்த கிளைகளூடாக அல்கெய்டா அமைப்பிற்கு நிதி உதவிகள் வழங்கப்படுவதாகவும் குற்றஞ் சாடடப்பட்டுள்ளது. (து-2)

## ஈரானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்-கெய்டாவினரை வெளியேற்றுக!

## அமெரிக்கா வேண்டுகோள்


(வாஷிங்டன்)

ஈரானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்-கெய்டா உறுப்பினர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு அமெரிக்கா ஈரானைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அல் கெய்டா உறுப்பினர்களை அவர்களின் சொந்த நாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், சொந்த நாடுகளில் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா ஈரானிடம் கோரியுள்ளது.

ஈரானில் பல அல்-கெய்டா உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஈரான் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்ததையடுத்தே அமெரிக்கா இவ்வாறு கோரியுள்ளதாக வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஸ்ஹொட் மக்லன்ட் தெரிவித்துள்ளார்.

(து-2)




கருத்தடையைத் தடை செய்யக் கோருவோரும், கருத்தடையைச் சட்டபூர்வமாக்கக் கோருவோரும் வாஷிங்டன் நகரில் அமெரிக்க உச்ச நீதிமன்றத்துக்கு எதிரில் வியாழக்கிழமை எதிரும் புதிருமாக ஒரு சேரத் தோன்றினர்.

## "பிருதுவி" 23வது தடவையாக பரீட்சிக்கப்பட்டது

(புதுடில்லி)

இந்தியா 23வது தடவையாக "பிருதுவி" ஏவுகணையை நேற்று முன்தினம் பரீட்சித்துள்ளது.

ஒரிசா மாநிலத்தின் கிழக்குப் பகுதியிலேயே இந்த ஏவுகணை பாட்சிகசப்பட்டதாக ரொயட்டர் செய்தி தெரிவிக்கின்றது.

சுமார் 1 தொன் வெடி மருந்துகளை இந்த ஏவுகணை தாங்கிச் செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது. (து-9)

விடுத்திருந்தார்.

இவரின் அழைப்பினை உடன

செயலாளர் நாயகம் என்ற பெருமையை கோபி அனான் பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (து-9)




பல்வேறு நவீன கலைப் பொருட்களைத்தயாரித்து உலகில் முன்னணி வகிக்கும் கானா நாட்டு கைவினைஞர்கள் தமது கலையினை தற்போது கொக்கக்கோலா போத்தல் வடிவத்தில் சவப்பெட்டி ஒன்றை தயாரித்து ரசிகர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

க.வல்லிபுரநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல.340331966v சிவலிங்கப் புளியடிக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். N.தம்பிரத்தினம், தம்பி பழக்கடை, ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். (8160)

### வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து

(யாழ்ப்பாணம்)

நலலூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலக பிரிவுக் குட்பட்ட பகுதிகளில்உள்ள வளர்ப்பு நாய்களுக்கு கட்டம் கட்டமாகத் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

இந்த வகையில் எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நேதாஜி சனசமூக நிலையம், மனோன மணி சனசமூக நிலையம், வளர் மதி சனசமூக நிலையம் ஆகியவற்றிலும்,

28ஆம் திகதி புதன்கிழமை கொக்குவில் கிராம அபிவிருத்திச் சங்கம், வராகி அம்மன் கோவிலடி, கலைமகள் சனசமூக நிலையம் ஆகியவற்றிலும்,

29ஆம் திகதி வியாழக்கிழமை காந்திஜி சனசமூக நிலையம், கலைவாணி சனசமூக நிலையம், கொக்குவில் சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

### சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையும் மாலைதீவும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடவுள்ளன.

இச்சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இது மாலைதீவு அதிகாரிகளின் அனுமதிக்காக அங்கு அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை வர்த்தகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், மாலைதீவு வணிக அமைச்சர், இலங்கை வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் தொடர்பு கொண்டு இன்னும் சில வாரங்களில் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியுமென நம் பிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18,60)

### மின்பிறப்பாக்கி அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு விடுதலைப் புலி

# எம்மிடம் இருப்பதைத்தான் கொடுக்கமுடியும் அதனால் நாம் நிறைவாகப் பெற முடியும்

எதிரி நாட்டில் இருந்து போருக்கான அறைகூவல் விடப்பட்டது. நாட்டை காப்பாற்ற போர்புரிய வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. நாட்டுப்



பற்றாளர்கள் போர்புரிய விருப்புடன் சென்றார்கள். நாட்டுக்காக தம்மைத் தியாகம் செய்ய வேண்டும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் அவர்கள் மனதுகளில் நிறைந்திருந்தது. எல்லோ ரும் போர்புரியச் செல்வதற்கு விருப்பம் உடையவர்களாய் இருக்கவில்லை. சுயநலத்தாலும் என்ன நடக்குமோ என்ற பயத்தாலும் பலர் ஒழித்துக் கொண்டார்கள்.

போர் முடிந்து போரிலே பங்குபற்றியவர்கள் வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். தம்முடைய பிள்ளைகளை, உடன் பிறப்புக்களை, நண்பர்களை, உறவினர்களை என்ன கோலத்தில் சந்திக்கவேண்டி வருமோ என்ற ஏக்கத்தோடும் பயத்தோடும் எல்லோரும் இருந்தார்கள். யார் எந்த அவயவங்களை இழந்து போனார்களோ யார் போரிலே இறந்து போனார்களோ என்ற பயமும் ஏக்கமும் பலர் மனதுகளிலும் நிறைந்திருந்தது.

நாட்டுக்காகப் போர்புரிந்து வீடு திரும்பி இருந்த அயல்வீட்டவரைச சந்திக்க ஒரு நண்பர் சென்றார். போர் முடிந்து வந்தவர் ஒரு கையில்லாமல் இருப்பதைக் கண்டு ஏக்கத்தோடும் கவலையோடும் ஐயோ! என்ன இது ஒரு கையை இழந்து போய்வந்திருக்கிறாயே இனி வாழ்க் கையில் என்ன செய்யப்போகிறாய் கையை இழப்பது ஒரு பெரிய இழப் பல்லவா என்று அவர் பரிதாபப் பட்டார்.

போருக்குச் சென்று திரும்பியவர் "நீங்கள் கூறுவதை சற்றுத் திருத்திக் கொள்ளுங்கள். நான் எனது நாட்டைக் காப்பாற்ற போருக்குப் போனேன். நீங்கள் கூறு வது போல் நான் கையை இழந்துவிட்டு வரவில்லை கையை நாட்டுக்காக கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன்" என்றார்.

### தியாகம்செய்யுங்கள்

வம் பெறும்போது கடினமானவையாகவே இருக்கப் போகின்றன. கொடுக்கவோ, பகிரவோ, அர்ப்பணிகவோ, தியாகம் செய்யவோ முதலில் மனதில் விருப்பம் வேண்டும். விருப்பம் மட்டும் இருந்தால் போதாது. மனதில் உறுதிவேண்டும். விருப்பமும் உறுதியும் மட்டும் இருந்தால் போதாது அது ஒரு செயலாக உருவெடுக்க வேண்டும்.

நாம் கொடுப்பதோ, பகிர்வதோ,

## பரமபிதா காட்டிய பாதை

அர்ப்பணிப்பதோ, தியாகம் செய்வதோ உண்மையான பயனைக் கொண்டு வருவதாய் இருக்க வேணடும். நிறைந்த பயனைக் கொண்டு வராத பணிகள் அர்த்த மற்ற பணிகளாகவே முடிந்துவிடும். நமது தியாகம் அர்த்தம் நிறைந்ததாய் இருக்க வேண்டுமானால் அது நிறைந்த பயனை நிறையப் பேருக்கு கொண்டுவரும் என்பதில் கவனமும் தெளிவும் இருக்க வேண்டும்.

### எவற்றைக்கொடுக்க வேண்டும்

நாம் எதைக் கொடுக்கிறோம் எப்படிக் கொடுக்கிறோம், எதை அர்ப்பணிக்கிறோம், எந்த நிலையில் அர்ப்பணிக்கிறோம், இந்தப் பணியின்போது எமது மனநிலை என்ன, உள் நோக்கம் என்ன என்பதெல்லாம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. என்னுடைய அளபரிய செல்வத்தில் அல்லது நிறைந்து போன திறமையில் அல்லது அளவுக்கதிகமான பொருட்களில் அல்லது தேவையற்றவற்றை மற்வர்களுக்கு கொடுப்பதும் பகிர்வதும் உயர்ந்த நிலையானதாகக் கருதப்படமுடியாது.

ஒரு தடவை இயேசு காணிக்கைப் பெட்டிக்கருகே அமர்ந்து அதிலே பணம் போடுவோரை பார்த்துக் கொண்டிருந்தார். நிறையப் பேர் வந்து நிறையப் பணத்தை அக்காணிக்கைப் பெட்டியினுள் கொட்டிவிட்டுச் செல்வதை அவர் பார்த்தார். ஓர் ஏழை விதவை இரண்டு செப்புக் காசுகளைப் போடுவதைப் பார்த்து இப்பெண் அதிக காணிக்கைகளைப் போட்டுள்ளாள் என்று இயேசு புகழ்ந்தார். தம் சீடரும் மற்றவர்களும் இந்த முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என விரும்பினார். அவள் தன்னுடைய இல்லாமையிலும் இயலாமையிலும் தன்

பையில் வரும் என்று சொல்லுவார்கள். ஒருவரிடம் இல்லாததை ஒருவர் கொடுக்கமுடியாது. ஒருவரிடம் இருப்பதைத்தான் கொடுக்கவோ பகிர்ந்து கொள்ளவோ முடியும். ஆனால் தேவையாய் இருப்பதை அவசியமாய் இருப்பதை வைத்திருக்க வேண்டும் என்று விரும்புவதைக் கொடுப்பது இலகுவானதல்ல. செல்வச் செழிப்பில் அள்ளிக் கொட்டிச் சிந்துவதை தேவையற்று இருப்பதைக் கொடுப்பது இலகுவானது.

### கொடுத்தலுக்குரிய மனநிலை

எந்த மனநிலையில் கொடுக்கிறோம் என்பதும் இங்கு கவனிக்கப் பட வேண்டும். திரும்பப் பெற்றுக் கொள்வதோ பல மடங்கு அதிகமாகக் கிடைக்கும் வட்டியோடு பெற்றுக் கொள்ளவோ இதன் வழி ஏதாவது சலுகைகளை நாம் அடைய முடியும் என்ற மனநிலையோடு கொடுப்பது அர்ப்பணிப்புக்குரிய அல்லது கொடுத்தலுக்குரிய நல்ல மனநிலை ஆகாது.

கொடுக்கின்றபோதுதான் இன்னும் அதிகமாகப் பெற்றுக் கொள்ளுவோம் என்பது பலரின் வாழ்வனுபவமாக இருக்கிறது. கொடுக்கக் கொடுக்க பெற்றுக் கொண்டே இருப்போம். அல்லது பெறுவதற்கு ஒரு வழி பிறக்கும் என்ற நிலையோடு கொடுக்கின்றபோது எங்கள் கொடுப்பனவுகள் ஆசீர் மிகுந்த கொடுப்பனவுகளாக அமைய வழி உண்டு.

அன்னிய நாட்டில் பிறந்து அர்ப்பண வாழ்வைத் தெரிந்து இந்திய மண்ணுக்கு வந்து இனி இல்லை என்ற ஒரு பணியை முழுமையாக நிறைவு செய்த புனிதையாக உயர இருப்பவர் அன்னை திரேசா. வெறும் இந்திய 5 ரூபாக் குத்தி நாணயத்தை கையிலே பொத்திக் கொண்டு தனது மடத்தைவிட்டு யாருடைய துணையுமின்றி வெளியே வந்த போது நோபல் பரிசையும் மற்றைய பரிசில்களையும் பெற்றுக் கொளளும் அளவிற்கு உயர்வேன் என அன்னை திரேசா நினைத்திருக்க நியாயம் இல்லை. கொடுத்துக் கொண்டே இருந்தார். கொடுக்கக் கொடுக்க அவருக்கு வழி பிறந்து கொண்டே இருந்தது. அவர் ஒரு

கொண்டே இருந்தார்.

கொடுப்பதென்பது இலகுவான பணியல்ல. கொடுப்பதற்கு மனதில் விருப்பம் இருக்க வேண்டும். மனதில் உறுதி இருக்க வேண்டும். இருக்கின்ற அனைத்தையுமே அல்லது அவசியமான அனைத்தையுமே கொடுககலாம் என்பது இலகுவான ஒரு பணியல்ல. எம்மையும் அர்ப்பணிக்க எம்மைக் கொடுக்க, எம்மைப் பகிர, எம்மைத் தியாகம் செய்ய, எமது மண் எப்போதுமே எம்மை அழைத்திருக்கிறது. எமது சமய அமைப்புக்கள் எப்போதுமே எம்மை வேண்டி நிற்கின்றன. அவற்றை நிறைவு செய்யும் போதுதான் நாம் அர்ப்பண வாழ்வு வாழமுடியும். கையை இழந்து போய் வர்வில்லை. கையைக் கொடுத்துவிட்டு வந்திருக்கின்றேன் என்ற அந்த இளைஞனின் வார்த்தைகள் எமக்கு எப்போதும் பணிபுரிய துணிவும் துணையும் தரட்டும்.

இறைவா உம் சாந்தியின் கருவியாக என்னை ஆக்கியருளும்.

**எங்கு பகையுள்ளதோ அங்கு அன்பையும்**
**எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பையும்**
**எங்கு ஐயமுள்ளதோ அங்கு நம்பிக்கையையும்**
**எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியையும்**
**எங்கு துன்பமுள்ளதோ அங்கு இன்பத்தையும் யான் பரப்பிட அருள் தாரும்**

நான் என் ஆறுதலுக்காக அலைவதைவிட்டு ஆறுதலைக் கொடுக்க விழைவேனாக.

எனனை மற்றோர் புரிந்து கொள்ள வேண்டுமென்று துடிப்பதை விடுத்து, ஏனையோரைப் புரிந்துகொள்ள யான் விழைவேனாக.

என்னை மற்றவர்கள் நேசிக்க வேணடுமென்று தவிப்பதை விடுத்து, மற்றவர்களை நேசிக்க முற்படுவேனாக

ஏனெனில் கொடுப்பதன் மூலம் தான் பெற்றுக்கொள்ள முடியும் மன்னிப்பதன் மூலம்தான் மன்னிப் படைய முடியும்

மடிவதன் மூலம்தான் முடிவில்லா வாழ்விற்குப் பிறக்க முடியும் ஆமென்.

என்ற செபம் எம் அனைவருக்கும் வழிகாட்டும், அர்ப்பணிக்கும் நல்ல செபமாய் அமையட்டும. எமது மண்ணில் இன்றைய அரசியல ஸ்திரமற்ற நிலையில் எம் நாட்டுத் தலைவர்கள்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

## அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு விடுதலைப் புலிகள் மின்பிறப்பாக்கி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் இருநத இரு மின்பிறப்பாக்கிகளும் பழுதடைந்த நிலையில் நீண்டகாலமாக இருந்து வருவதால், இவ் வைத்தியசாலையின் பணிகளில் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

இதனை கருத்தில்கொண்டு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனால் 27 கிலோ வாற்ஸ் மின்னினை உற்பத்தி செய்யக்கூடிய புதிய மின் பிறப்பாக்கி ஒன்றை நேற்று முன்தினம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

(உ-4)

## பசுமாட்டு திருட்டு அதிகரிப்பு

(கந்தர்மடம்)

பசு மாடுகளைத் திருடி இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்கள் ஊர்காவற்றுறைப் பகுதியில் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில், இறைச்சிக்கு வெட்டப்படுவதற்காக பாழடைந்த வீடொன்றின் பின்புறத்தே கட்டி வைக்கப்பட்டிருந்த பசு மாடொன்றினை ஊர்காவற்றுறைப் பகுதி மக்கள் கண்டுபிடித்து அப்பகுதி கிராம அலுவலரிடம் ஒப்டைத்துள்ளனர்.

இதேவேளை, இப்பகுதியில் உள்ள கைவிடப்பட்ட கிணறுகளில் களவாக வெட்டப்படும் மாடுகளின் எச்சங்கள் மிதப்பது அடிக்கடி அவதானிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

(உ-112)

போல நான் கையை இழந்துவிட்டு வரவில்லை கையை நாட்டுக்காக கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன்" என்றார்.

### தியாகம்செய்யுங்கள்

கொடுப்பது, பகிர்வது, அர்ப்பணிப்பது, தியாகம் செய்வது என்பன எல்லாம் எப்போதுமே செயல்வடி

வர்களும் இந்த முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என விரும்பினார். அவள் தன்னுடைய இல்லாமையிலும் இயலாமையிலும் தன்னிடம் இருந்த முழுமையையுமே அர்ப்பணம் செய்துவிட்டாள்.

பானையில் இருந்தால்தான் அகப்

நியாயம் இல்லை. கொடுத்துக் கொண்டே இருந்தார். கொடுக்கக் கொடுக்க அவருக்கு வழி பிறந்து கொண்டே இருந்தது. அவர் ஒரு வற்றாத ஜீவ நதியாக சேரிப் புறங்களிலும் வீதியோரங்களிலும் ஏங்கி நின்றோருக்கு அள்ளிக் கொடுத்துக்

கும் நல்ல செபமாய் அமையட்டும. எமது மண்ணில் இன்றைய அரசியல ஸ்திரமற்ற நிலையில் எம் நாட்டுத் தலைவர்கள் கொடுக்க தம்மை விட்டுக் கொடுக்க இறைவரம் வேண்டுவோம்.

# ஸ்ரீ.சு.கவும் ஜே.வி.பியும்

# இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல என்ற விடயத்தில் கருத்தொருமித்துள்ளன

## ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்பதை கூட்டமைப்பை ஏற்படுத்தியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஏற்றுக்கொண்டு அதில் நம்பிக்கை வைத்துள்ளன.

ஜனாதிபதி செயலகம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையொன்றில் இவ்வாறு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஏற்படுத்திக்கொண்ட கூட்டமைப்பு தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக அமையும் என தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துக்களை நிராகரித்தே இந்த அறிக்கையை ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஏற்படுத்தியுள்ள கூட்டமைப்பின் மூலம்தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு எத்தகைய அச்சுறுத்தல்களும் ஏற்படமாட்டாது.

இனப்பிரச்சினை தொடர்பான தீர்வில் இரண்டு கட்சிகளும் அன்னியோன்னிய புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொண்டுள்ளன.

எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்லும் முறையை இக்கூட்டமைப்பால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நிலையில் தமிழீழவிடுதலைப் புலிகள் தென்னிலங்கையில் அதிகாரத்தில் உள்ள எந்தக் கட்சியுடனும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவற்கு தயாராக இருப்பதாக அறிவித்துள்ளதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மதித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வாக மாட்டாது என்று கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்ட இரு தரப்பினரும் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## சக்தி முன்பள்ளி புனரமைப்பு

(வடலியடைப்பு)

தொல்புரம் மத்தி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் சக்தி முன்பள்ளி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்து கலாசார அமைச்சு ஒதுக்கிய 50ஆயிரம் ரூபா நிதி மூலம் இப்புனரமைப்புப் பணி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-21)

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான நவம்பர் மாதப் பலன்கள்.**

## மேடம்



**அச்சுவினி 4 பாதங்கள்-பரணி 4 பாதங்கள். கார்த்திகை முதல் பாதம் வரை-9 பாதங்கள்.**

உங்கள் அதிபதி கோள் குருவுடன் சேர்ந்து 6இல் மறைந்திருப்பதைக் கவனிக்கவும். சூரியன் 7ல் நீசம் எதிர்பாரா மாற்றம் மன சலனத்தை உண்டாக்கும் எழுத்து மூலம் பாதிப்பு உண்டாக்கும். சிலருக்கு சில வகையான வழக்குத்தோன்றுவது கூட இருக்கலாம். போட்டி, பந்தயம், சூதாட்டம் போன்ற ஈடுபாடு அதன் மூலம் விரயமும் உண்டாக்கும். வெளி வட்டார மனிதர்கள் அனுகூலமாக இல்லை. குடும்பத்திலும் குழப்பமான நிலை இருந்து கொண்டேதான் இருக்கும். கணவன் மனைவி இடையே காரணமற்ற கலக்கம் உண்டாகும். குழந்தைகளின் வகை மருத்துவச் செலவுகள் சற்றுக் கூடுதலாகவே இருக்கின்றன. பல்நோய், மூக்குப் பாதிப்பு உண்டாகும். சிலருக்கு கலியாணமும் கூடிவந்து விடும். புத்திரியர் கல்வி பாராட்டுக்குரியதாக அமையும். தொழில் கூடி வந்து விடும். தொழில் வாழ்க்கை நிலையும்சிறக்க குரு ஆசி புரிகிறான். கலைப்பிரிவு ஆண் ,பெண்களுக்கு இம் மாதம் ஆரம்பமே நல்லதாக இருக்கிறது என்றாலும் செலவோடு ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடக்கூடியது. மாணவ மாணவியர்களுக்கு மகிழ்ச்சியான போக்கு தொடர்ந்து இருக்கும் இது நல்ல மாதமே. உங்கள் அலுவல்கள் தெளிவான நிலையில் சென்று இருக்கும். நல்ல தேவைகள் பூர்த்தியாவதிலும் கூட தடையில்லை. சகோதர வகையில் மன பேதமும் இருககத்தான் செய்யும். பிரயாணம் உறவினர் இல்லத்தில் விருந்து உண்பது போன்றவையும் இருக்கின்றன. சுப விஷயம் பிரயாணம் அடிக்கடி இருக்கும். சத்ருக்கள் நேர்முக வழி உங் களை ஒன்றும் செய்யாது. மறைமுக வழியில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிலர் வாகனம் வாங்குவது வாகன வழியில் ஏற்பட்ட வழக்கு சாதகமாக்கிக்கொள்வது போன்ற நன்மைகள் உண்டு. இந்த இராசி கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு இதர பெண்களுக்கும் நம்பிக்கை தரும் நன்மைகள் இருக்கின்றன. காதல் கலியாண முயற்சி, ஆபரணங்கள் வாங்குவது, இரகசியக்கடிதம் எழுதுவதும் ஆகும். பெண்களுக்கு கலைப்பிரிவினர்களால் அனுகூலங்கள் சில இருக்கின்றன. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் நன்றாக இல்லை. உறவினர் இல்லம் போய் வருதல், விருந்து உண்பதும் உண்டாகும். சில அந்நிய நாட்டு கடிதப் போக்குவரத்தில் புதிய திருப்பத்தைப் பெறுவர். கணவன், மனைவி உறவு முக்கியமாக இருக்கும். சீதள பாதிப்பு சிறு சிகிச்சையும் அவசியமாகும். குழந்தைகள் ஆரோக்கியம் குறித்தபடி தெளிவாகவே இருக்கின்றன. தான் எதிர்பார்த்த மாற்றத்தை இப்போது பெறுவீர்கள். குடும்பத்தில் இனிமையான சூழ்நிலை எல்லோருக்கும் இன்பம் தருவதாக இருக்கும். குழந்தைகள் மகிழ்ச்சி மிக்கவர்கள். புத்திரியர் கல்வி உயர்வு குறித்த படி இருக்கிறது. குடும்பத்தில் பெண்களுக்கு வெண்மை நீலக்கல் ஆபரணச் சேர்க்கையும் உண்டாகும். வாகனச் சேர்க்கை திடீர் பிரயாணம், ஸ்தல தரிசனம் உண்டாக்கும்.

## இடபம்



**கார்த்திகை 2,3,4வது பாதங்கள்-**

ஈடுபாடு புகழ்தருவதாக அமைந்து வரும். சிலர் கட்டுமான வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டியிருக்கும். சகோதர, சகோதரி வகைக்கு முக்கிய செலவுகளை ஏற்பதும் அவசியமாக இருக்கும். உறவினர்களுடன் சேர்ந்து விருந்துண்பது முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருக்கும். குடும்பத்திற்கு கலைப்பொருட்கள் சேர்க்கையும் உண்டாகும். கடன்பட்டாலும் காரிய சாதனைகள் பெரிதாக உருவெடுத்து இருப்பதை அறிய முடிகிறது. தொழில் கூட்டு உள்ள மனிதர்களின் உயர்ந்த போக்கு உங்கள் செயலில் வேகத்தை உண்டாக்கி இருக்கிறது. கணவன் மனைவி உறவு சுமுகமாக இருக்கும். குடும்பத்திற்கு நாகரீக வாகன சேர்கையும் உண்டாக்கும். சிலருக்கு திருமணம் கூடிவருவதற்கு ஜன்மகுரு காரணமாக இருப்பான். ஆரம்பத்தில் கண்டச சனி தீயவனாக இருந்தவன் இப்போது சுப கோள் சாரத்தில் செல்வதால், தனம் கொடுப்பவனாக குடும்ப வாழ்க்கையை இருக்கும். கௌரவத்திற்கு ஆசைப்பட்டு பிறருக்குக் கொடுக்கும் பணம் திரும்ப வராது. குழந்தைகள் ஆரோக்கியம் விருத்தியடையும். நீங்கள் உறவினர் வகையில் இப்போது இடைவெளி உடையவர்களாகவே இருக்கிறீர்கள். சகோதர வகை உயர்வு உடையவர் நீங்கள். எனவே கடுமையான நிலை என்பது குறைந்து விட்டன. சிலருக்கு மூளை சம்பந்தமான நோய் இருந்தது. இப்போது குறைந்து வரும் என்று எதிர்பார்க்கலாம். உடல் அரிப்பு, புண் முதலானவையும் உண்டாக்கக்கூடும். சிலருக்கு பதவி இறக்கமும் உண்டாக்கும் என்பதால் மிகவும் எச்சரிக்கையாக செயல்படவும். வியாபாரிகள் கடன் விஷயத்தில் கவனம் வைக்க வேண்டும். சுப காரியம் ஆகியவற்றில் கலந்து கொள்ளுதல், புதிய நகை, துணிமணிகள் வாங்குவது போன்றவையுடன், குடும்பம் கலகலப்பாக இருக்கும். தம்பதிகளுக்குள் அன்னியோன்னியம் மிகுந்து காணப்படும். ஆரோக்கியம் திருப்தியளிப்பதாக இருக்கும். கூட்டுத்தொழிலாக இருப்பின் சிலவகையான மாற்றங்களை செய்யவேண்டி இருக்கும். இருப்பினும் விருந்து, ஆடல்,பாடல் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது. இயந்திரம் வாகன தொழில் உள்ளவர்களுக்கு தன வரவு ஒரே சீராக அமைந்திருக்கும். உங்களைப் பிடித்திருக்கும் பழக்கத்தினால் குடும்பத்தில் செலவதிகம். கொடுக்கல்,வாங்கலில் வேகம் அதிகரித்திருக்கின்றன. கொடுத்து வைத்த பணம்

# உங்களுக்கு எப்படி?

சிறக்க செய்பவனாக விளங்குகிறான் என்பது கண்கூடாக காணபதாகும். இந்த இராசி உத்தியோகப்பிரிவினருக்கு, பெருமைக்குரிய பதவி உயர்வை செய்வான். பாராட்டத்தக்க இடப்பெயர்ச்சியையும் செய்யக்கூடியவன் குரு. விருந்து வேடிக்கை நிகழ்ச்சிகளை அனுபவித்தலும் உண்டாகும்.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3,4வது பாதங்கள் - திருவாதிரை 4 பாதங்கள் - புனர்பூசம் 1,2,3 பாதங்கள் வரை 9-பாதங்கள் வரை 9 பாதங்கள்**

உங்கள் சுக இல்லத்தில்,செவ்வாய் சுக்கிரன கூடுவதால் இந்த மாதம் மாணவ, மாணவிகளுக்கு மட்டுமே விளையாட்டு, பந்தயம் போன்ற வழிகளில் விருதுகளை வழங்கும். பெரியவர்களுக்கு ரேஸ்,போட்டி, லாட்டரி போன்றவை பெரும்பான்மை நன்மைகளைச் செய்யும். கடன் வகைக்கு காலக்கெடு சொல்லவேண்டியிருக்கும். வழக்கு இருப்பவர்கள் தள்ளிப்போட்டுக்கொள்வது தான் நல்லது. சத்ருக்கள் வேகம் இன்னும்குறையவில்லை. சகோதர,சகோதரி வகையில் செலவுகள் அவசரமுடையதாக இருக்கும். புது உடைகள் வாங்குவது, சுப விஷயங்களில் கலந்து கொள்வது, விருந்துண்பது போன்றவை இருக்கவும் செய்யும். உங்கள் பழைய நண்பர்கள் சிலர் உடன் இருந்து செயல்படும் காரியங்கள் கவர்ச்சிகரமான போக்கை உதயமாக்கிவிடும். ஆரோக்கியம் மட்டும் இடையிடையே மருந்து செலவுகளை உண்டாக்கவல்லது. சகோதர, சகோதரி வகையில் அவசர செலவுகள் இருக்கும். தொழில் வழியில் அலைச்சல் சற்று அதிகமாக உடையவர்களே. தேக ஆரோக் கியத்தில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். சிலருக்கு இரத்த அழுத்த நோயும், சிகிச்சையும் அவசியமாகலாம். பிரயாணம் உடனுக்குடன் இருக்கும். பெரிய மனிதர்களின் சந்திப்பு பெருமைக்குரிய பெரிய காரியங்களை முடிப்பதற்கு உதவியாக இருக்கும். தொழில் வகையில் முடக்கப்பட்டிருந்தீர்கள். இனி உங்களுக்கு வரப்பிரசாதம் அளித்தது போன்றவையே. சிலருக்கு திடீர் தன வரவு, தூரத்து சந்தோஷச்செய்தி, பாராட்டு, பகைவர்கள் மறைவு போன்றவை இருக்கிறது. திசை புத்திகள் நன்றாக இருப்பின் லாட்டரி, போட்டி,பந்தயம் விளையாட்டு வகைளும் உங்களுக்கு அனுகூலமாக வந்துவிடும். உங்களை கடிதத்தொடர்பில் அதிகக் கவனம் செலுத்தவும் அது உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். உங்கள அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்து இப்போது உறவும், நட்பும் நெருங்கி இருக்கும். காதல்,கல்யாண சம்பந்தமான கடிதத் தொடர்புக்கு இம்மாதம் வெகு சிறப்பாக இருக்கிறது. புதியதாக உத்தியோகத்திற்கு மனுப்போடுவது, திருமணம் முடிப்பது போன்ற வகைக்கு ஏற்ற காலம் இது . சிலர் குடியிருக்கும் இடமாற்றத்தைப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. மாதக் கடைசிப்பகுதியில் போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகளில் தன ஆதாயம் இருக்கிறது. வேண்டாதவர் என நினைத்தவர்கள் வெகு அருகில் வந்து நன்மை புரிவர். உறவினர் வருகை குடும்பத்தில் சுப விஷயங்கள் உண்டாகும்.

## சிம்மம்



**மகம் 4 பாதங்கள் - பூரம் 4 பாதங்கள்-உத்திரம் 1வது பாதம் வரை - 9 பாதங்கள்**

உங்களுக்கு சனி லாப இல்லத்தில் இருப்பதால் செவ்வாயும், நீச சுக்கிரனும் தன இல்லத்தில் 2ல் குரு, நீங்கள் அதிக செலவு செய்பவரல்ல என்றாலும் ,சனி தனத்தைக்கொடுத்து செலவுகளை வைத்துவிடுபவனே குடும்ப முன்னேற்றம் குறித்தபடி இருக்கும். கணவன் மனைவி உறவில் சில சமயம் எழும் பிரச்சினைகள் சிறு கலகத்திற்கு உரியதாக இருக்கும். வெளியூர் மனிதர்கள் நீங்கள் எதிர் பார்த்தபடியே நடந்து கொள்வர். சிலருக்கு எழுத்து ஒப்பந்தம் போன்ற நன்மைகளும் உண்டாகும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு இலாக மாற்றம் இடப் பெயர்ச்சியும் உண் டாகும். பண நெருக்கடிகள் குறைந்து கொண்டே வரும். சொத்து வழியில் இருந்து வந்த வழக்கு சிக்கலகளைத் தீர்க்க புதிய மனிதர்களின் உதவியை நாட வேண்டியிருக்கும். நண்பா கள் உதவி அனுபவத்திலும் திருப்தியான போக்கு தொடர்ந்து இருக்கும். தூரத்து கடிதங் கள் செய்தொழில் வழிக்கு சிறப்பான அம்சத்தை உண்டாக்கும். இது உங் களுக்கு பல வழி வாய்ப்பை உண்டாக்கும். மாதமே என்ப தில் சந்தேகமில்லை. கடந்த ஆண்டு இழப்புகளையும் இந்த ஆண்டு சரிகட்டிவிடலாம் கவ லைப்படாதீர்கள். தனம் நடமாட்டம்

திடீர் பிரயாணம், ஸ்தல தரிசனம் உண்டாக்கும்.

## இடபம்



**கார்த்திகை 2,3,4வது பாதங்கள்-ரோகிணி 4 பாதங்கள்-மிருகசீரிடம் 1,2 பாதங்கள் வரை-9 பாதங்கள்**

இது சிறப்பான மாதமாக இருக்கக் கூடும். காரணம் 5ல் நீச சுக்கிரனுடன் சேர்ந்த குரு செவ்வாய் தான். பெரிய தன வரவும் தான் நினைத்தது போல இருக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, விருந்துண்பதும் இருக்கும். பழைய விஷயங்கள் சில கூடி வருவது மனமகிழ்ச்சியை உண்டாக்கும். சிலருக்கு திருமணம், காதல், கல்யாணம் சம்பந்தமாக திடீர் முடிவு உண்டாகும். தாய்வழி உறவில் செலவுகள் அதிகமாக இருக்கின்றன. குடும்பத்தில் சில சமயம் சச்சரவுகள் உண்டாகி உங்களை வேறுபடுத்தலாம். அதனால் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கலைப்பிரிவினருக்கு மனத்தெளிவை உண்டாக்கும் என்பதால் தொடர்ந்து காரியத்தில் கண்ணாக இருக்கவும். சிலருக்கு நாகரீக வாகனம் வாங்கிய வகையில் அல்லது பழுதுசெய்தல் வகையில் பணச் செலவு தவிர்க்கமுடியாதது. பிரயாணம் சுப காரியங்களில் முடிக்க அவசியமாக இருக்கும். இப்போது உறவினர், குடும்பப் பெரியவர்கள் அனுகூலமாக இயங்குவது மகிழ்ச்சியளிக்கும். கடிதத்தொடர்பும் கவர்ச்சியானதே. பெண்களுக்கு நல்ல உணவு, உடைகள் சித்தி, சந்தானம் இல்லாதவர்களுக்கு புத்திரப்பேறு கிட்டுவதும் குறிப்பாக சிறப்பு நன்மைகளாகும். செய்தொழில் வகையில் சிறப்புத்தன்மை இருந்தும், எதிர்பார்ததபடி பணம்பெயரவில்லை. மாணவர்களின் தேர்விலும் இப்படியே இருப்பதால் அதிக கவனம் எடுத்துக்கொண்டு படிக்கவேண்டும். பிரயாணம் முக்கியத்துவம் உள்ளதாக இருக்கும். திட்டமிட்டது தேங்கி நிற்கத்தான் செய்கின்றன. தொட்டதெல்லாம் தள்ளிப்போய்விடுகிறது. இதற்கு ஒரு காரணம் குரு உங்களுக்கு ஆகாதவன் என்பதை மறக்க வேண்டாம். சில அவசர பிரச்சினைகள் உடனே முடிக்க முடியாமல் இருப்பது உண்மைதான். உடல் ஆரோக்கிய பாதிப்பு சிலர் மருத்துவ சிகிச்சை பெறுவதும் குறிப்பிடத்தக்கது. உடன் இருப்பவர் அல்லது கூட்டு மனிதர்களின் போக்கு திருப்தியாக இயங்க முடியாது. இடையிலே இருந்த வேற்றுமைக்கு மூன்றாவது மனிதரின் செயல், பேச்சுக்கள் தான் காரணமாக இருக்கும். இதை கட்டுப்படுத்தவும் பொது விஷயங்கள் சாதம் அளித்தது போன்றவையே. சிலருக்கு திடீர் தன வரவு, தூரத்து சந்தோஷச்செய்தி, பாராட்டு, பகைவர்கள் மறைவு போன்றவை இருக்கிறது. திசை புத்திகள் நன்றாக இருப்பின் லாட்டரி, போட்டி,பந்தயம் விளையாட்டு வகைளும் உங்களுக்கு அனுகூலமாக வந்துவிடும். உங்களை குறைகூற மற்றவர் காத்திருப்பது உங்களுக்குத் தெரியாது. எனவே,மறைமுக சத்துருக்கள் உண்டு என்பதை கவனிக்கவும். போட்டி,பந்தயம், விளையாட்டு இந்த வழி வெளிச்சமாகவே இருக்கிறது. எதிர்நோக்க வேண்டி இருக்கிறது என்பதை ஆரம்பத்திலேயே கொடுத்திருக்கிறேன். குடும்ப வகையில் அவசர அவசிய தேவைகள், செலவுகள் இருப்பதை நீங்கள் உணர வேண்டும். ஒன்றுக்கு குறிப்பிட்டு வைத்திருக்கும் பணம் வேறு ஒன்றுக்கு செலவழிக்க வேண்டியிருக்கும். வெண்மை, நீலக்கல் ஆபரண சேர்க்கையும் உண்டாகும். அரசியல்வாதிகளுக்கு மிதமான போக்கு இருப்பதுடன் கௌரவச்செலவுகளும் கடுமையாக இருக்கும். எழுத்து மூலம் எதிர்பார்க்கும் அரசாங்க உத்தரவு, தொழில் வகைக்கு திருப்தியாக வரவில்லை. இந்த வகை சற்று காலதாமதமாகும். உங்கள் கணக்குகளை கவனமாக பார்க்கவேண்டும். கூட்டுத்தொழில் உள்ளவர்களுக்கு பாக ருதர்கள் இடையில் பிணக்கு உண்டாக வாய்ப்பு இருக்கிறது. வழக்கு வேகமில்லை. வாய்ப்பு பேச்சில் நிகழக்கூடியது தான்.

## கடகம்



**புனர்பூசம் 4வது பாதம் - பூசம் 4 பாதங்கள் - ஆயிலியம் 4 பாதங்கள் வரை - 9 பாதங்கள்**

கல்யாணம் காதல் சம்பந்தமான கடிதங்கள் கனிவு பெற்று வந்துவிடும். தன் இல்லத்திற்கு செவ்வாய் தனவரவுக்கு வழி செய்வான். கடன் பட்டாவது கட்டட வேலைகளை முடிக்கவேண்டிய அவசியம் உருவாகும். மேலும் குடும்ப உறவில் சுப காரியங்கள் முடித்தல், மற்றவர்கள் பாராட்டு போன்ற நன்மைகள் ஈர்க்கின்றன. மறைமுகச் சத்ருக்கள் என்பது இருந்தாலும் அவர்களால் சிறு சிறு இடையூகளுக்கிடையே நீங்கள் வெற்றி வீரர்களாக, வீராங்கனையாக திகழ்வீர்கள். உங்கள் கூட்டு மனிதர்களின் கவனத்தைத் தான் நீங்கள் கவரவேண்டும் சில சமயம் பிணக்குகள் தோன்றும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகைகள் இடையிடையே ஆதாயமாகவே தூரத்து கடிதங் கள் செய்தொழில் வழிக்கு சிறப்பான அம்சத்தை உண்டாக்கும். இது உங் களுக்கு பல வழி வாய்ப்பை உண்டாக்கும். மாதமே என்ப தில் சந்தேகமில்லை. கடந்த ஆண்டு இழப்புகளையும் இந்த ஆண்டு சரிகட்டிவிடலாம் கவ லைப்படாதீர்கள். தனம் நடமாட்டம் தாராளமாகவே இருக் கும் கௌரவச் செல வுகளை உண்டாக்கினாலும் காரிய சாதனைகள் உண்டு. வழக்கு இருப்பினும் வேகமில்லை. கடன் இருந்தும் கவலை யைக் கொடுக்கவழியில்லை. உங்கள் நாகரீக வாகனத்தை புதுப்பிக்க செலவுகள் செய்யவேண்டியிருக்கும். புத்திரியர்கள் வகை சுபச் செலவுகள் இருக்கும். உத்தியோகப் பிரிவு, ஆண்,பெண் களுக்கு அலைச்சல், தூக்கமின்மையும் இருக்கும். புது உடைகள் சேர்க்கை பழைய வாகனம் மாற்றுவது மற்றும் தூரத்து சந்தோஷச்செய்திகள் இருக்கின்றன. கடன் தீரும் ஆனால் வழக்கு முடியாது. வார்த் தைக்கு மதிப்பு உள்ள மாதம். நீங்கள் முன் மாதம் கடைசிப்பகுதியில் செய்த வகையில் நல்ல திருப்பத்தை உண்டாக்கும். மாத ஆரம் பத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மனக்கண்முன் தோன்றும். கணவன் மனைவி உறவில் ஏற்பட்ட இடைவெளி அகன்று விட்டன. கண்ணியம் உடையவர்களாக இருப்பீர்கள். கொடுக்கல், வங்கலில் புதிய திருப்பத்தைப் பெறலாம். வரவேண்டிய பணம் சற்று காலம் கடந்து வந்தாலும் நல்ல நேரத்திறகுபயன்படுவதாக இருககும். போட்டி , விளையாட்டு நிகழ்ச்சிகள் திருப்தியளிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எப்படி இருந்தாலும் பிரயாணச்செலவு கௌரவச்செலவு உங்களை விடாது. பதவி அல்லாமல் முக்கிய பொறுப்புகளை ஏற்க வேண்டியிருக்கும். மேல் நிலை மனிதர் கள் திருப்தியான சூழ்நிலையில் இயங்குவர். சேர்ந்திருந்த உங்கள் கூட்டாளிகளுக்கு மன உறுதி தைரி யத்தை கொடுக்கும் படியாக இருக்கும். உங்கள் செயல் முன்பு தடைப்பட்ட வேலைகளையும் நடைமுறைக்கு கொண்டு வந்து நண்பர்களை உறவினர்கள் மத்தியில் பாரா ட்டுக்களை பெறுவீர்கள் கொடுக்கல் வாங்கல் குறித்தபடியே இயங்கும். கணவன் அல்லது மனைவிக்கு வண்ண உடைகள் வாங்குவீர்கள். தொழில் தன விஷயத்தில் பின்வாங்கவேண்டிய அவசியம் இல்லை. கொடுக்கல், வாங்கல் வகையிலும் தாராளப்போக்கு இருக்கிறது.

(தொடரும்)

சோதிடமேதை ராமன்

## இன்று ஒரு தகவல்

# இருமல்

இருமலில் முக்கியமாக இரண்டு வகை உள்ளது. சில இருமல் ரசிக்கும்படியாக இருக்கும். அது சங்கீத இருமல். சில அவஸ்தையாக இருக்கும். அது சங்கட இருமல். மருத்துவ ரீதியாகவும் இருமலை இரண்டு வகையாக நாம் பிரிக்கலாம்.

அதாவது சிலவகை இருமலுக்கு நாம் டாக்டரைத் தேடிப் போவது அநாவசியம். சிலவகை இருமலுக்கு நாம் டாக்டரிடம் போவது மிக அவசியம். சரி! இருமல் வருவதற்கு என்ன காரணம்? அதற்கு ஏகப்பட்ட காரணங்கள் உள்ளன. சுவாசப் பாதையில் ஏற்படும் உறுத்தல், தூசு அதிகமாகவுள்ள சூழ்நிலை, உணவுப் பொருள் தவறிப்போய் மூச்சுப் பாதையில் நுழைந்துவிட்டால் அதை வெளியே தள்ளத் தும்மல் வரும். கடுமையாக உணர்ச்சி வசப்படுவது, சிறுநீரகம் செயலிழப்பது, மார்பு எலும்புகளில் ஏற்படும் காயம் போன்றவற்றாலும் இருமல் வரலாம்.

சிலவகையான நோய்களுக்கு இருமல் ஒரு முதல் எச்சரிக்கை. நிமோனியா, ஆஸ்த்துமா, காச நோய், நுரையீரல் புற்றுநோய் போன்றனவெல்லாம் இதற்கு உதாரணம். சரி! எதுபோன்ற இருமலுக்கு டாக்டரைப் பார்க்கவேண்டும்?

இருமலுடன் சேர்ந்து காய்ச்சலும் இருந்தால் அதுவும் முக்கியமாக குழந்தைகளுக்கு இப்படி இருந்தால் முதல் நாளே டாக்டரைப் போய்ப் பார்ப்பது நல்லது. இருமும்போது இரத்தம் வந்தாலும் அது கவனிக்கவேண்டிய விஷயம். புகை பிடிப்பவர்களுக்கு இப்படி இருந்தால் அது **Bronchitls** ற்கு அடையாளம்.

நெஞ்சில் வலி, உணவு விழுங்குவதில் கஷ்டம், மூச்சுவிடச் சிரமம் இப்படியெல்லாம் இருந்தாலும் கூட டாக்டரைப் பார்ப்பது அவசியம். இதுபோல் எதுவும் இல்லாமல் வெறும் இருமல் கூட நான்கு நாளைக்கு மேல் நீடித்தால் டாக்டரைப் பார்க்கலாம். சிறு குழந்தைகள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உடனே கவனிக்க வேண்டும்.

நிலக்கடலை, சட்டைப் பித்தான், பென்சில் முனை எதையாவது விழுங்கிவிடும். அது மூச்சுப் பாதையில் இருந்து கொண்டு தும்மலை உருவாக்கும். குழந்தைக்கு இதைச் சொல்லத் தெரியாது. நாம்தான் புரிந்துகொள்ளவேண்டும்.

நாம் பயப்படத்தேவையில்லாத இருமல் எது தெரியுமா? சில பொருள் நமது உடலுக்கு ஒத்துக்கொள்ளாமல் வரும். தும்மல் வரும். அது எது என்பதை நாம் கண்டுபிடித்து நீக்க வேண்டும். இருமலுடன் ஜலதோஷமும் சேர்ந்து வருகின்றதென்றால் இதற்கு டாக்டரிடம் போகவேண்டாம்.

ஒரு பானையில் தண்ணீரைக் கொதிக்க வைத்து அந்த ஆவியை மூச்சு வழியாக உள்ளே இழுக்கலாம். நான்கு நிமிடங்கள் இப்படிச் செய்தால் போதும். சூடான திரவங்கள் நிறையக் குடிக்கலாம். ஒரு ஸ்பூன் தேன் சாப்பிடலாம். இது தொண்டையை இதமாக்கும். சிலர் இருமல், தும்மலுக்கு மார்பிலும் கழுத்திலும் மருந்து தடவுகின்றனரே அது நன்மை தராது.

மருந்து தடவிய இடத்தில் எரிவை உண்டாக்கும். இந்த எரிவை மூளை அதிகமாகக் கவனிக்கும். இதனால் இருமல், தும்மல் அவஸ்தையை அது மறந்துவிடும். அவ்வளவுதான் விஷயம். சிருக்கு இந்த மருந்தே அலர்ஜியாகிவிடும்.

சாதாரணமாக நமக்கு இருமல், தும்மல் வராமல் இருக்க நாம் என்ன செய்யலாம்? நமது உடலில் உள்ள எதிர்ப்புச் சக்தியை வளர்க்கவேண்டும். அதற்கு வழி சத்துள்ள உணவு, உடற் பயிற்சி, புகைப்பழக்கத்தைத் தவிர்த்தல், மதுப் பழக்கத்தைக் குறைப்பது, வேகமாக நடப்பது, ஓடுவது, நீச்சல், நடனம் இவை சுவாச அமைப்பை வலுப்படுத்தும்.

துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்று கூறுகின்றோமல்லவா? அதுமாதிரி தும்மலைக் கண்டாலும் தூர விலகுவது நல்லது. ஒரு தும்மலில் கோடிக்கணக்காக வைரஸ் கிருமிகள் வெளியே வருகின்றன. அடுத்தவரை இந்தக் கிருமிகள் சுலபமாகப் பிடித்துக்கொள்ளும். ஜலதோஷம், இருமல் உள்ளவர்கள் உபயோகப்படுத்திய கர்ச்சீப், டவல் போன்றவற்றை தொடாமல் இருப்பது நல்லது.

ஒரு தபால் கந்தோரில் ஒருவர் மிகவும் அக்கறையாக ஏதோ கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் ஒருவர் நின்று அதைக் கவனித்துக் கொண்டிருந்தார். சும்மா கவனித்துக்கொண்டிருந்த இவர் திடீரென்று ஒரு தும்மல் போட்டார். உடனே எழுதிக்கொண்டிருந்தவர் விலகி ஓட ஆரம்பித்தார்.

அவர் ஓட ஓட இவரும் அவரை துரத்திக்கொண்டே ஓடுகிறார். இதைக் கவனித்துக்கொண்டிருந்த ஒருவர் அவரை வழிமறித்துக் கேட்டார் " உங்கள் தும்மலுக்குப் பயந்து தானே ஓடுகிறார். அவரை ஏன் அநாவசியமாகத் துரத்துகிறீர்கள் " என்றார். இதற்கு அவர் " அப்படியில்லை அந்த ஆள் என் பேனாவை ஓசி வாங்கி கடிதம் எழுதினான் அதைக் கொடுக்காமல் எடுத்துக்கொண்டு ஓடுகிறான். அதனால்தான் துரத்துகிறேன் " என்றுகூறிவிட்டு தொடர்ந்து ஓட ஆரம்பித்தார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நோர்வேயின் பங்களிப்பை புறம்தள்ளுவது பொருத்தமற்றது

## ஜனாதிபதியிடம் சங்கரி வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் பங்காளிகளாகச் செயற்படுவதற்கும், சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கும் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கும் என இங்கு அழைக்கப்பட்ட நோர்வேப் பிரதிநிதிகளையோ அன்றி அம்முயற்சிகளில் அவர்கள் வழங்கும் பங்களிப்பையோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒதுக்கக் கூடாதென தமிழ் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்த சங்கரி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் வலியுறுத் தியுள்ளார்.



நாட்டின் சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காண்பதை உறுதிசெய்யுமாறு கோரி, தமிழ் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குஅனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்படி விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும், அரசாங்கம், விடுதலைப்புலிகளுடன் மாத்திரமே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும். ஒரேசமயத்தில் ஏனைய தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படக் கூடாது.



அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களுக்கு உரிய இடம் வழங்கப்படவேண்டியது அவசியம்.

ஜனாதிபதியும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவும் தமக்கிடையேயான கசப்புக்களை மறந்துவிட்டு சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-18,60)

# அமைச்சர் மகேஸ்வரனுக்கு எழுந்த சந்தேகத்தால் சபையில் குழப்பம்

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி யார்? என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும் என சபாநாயகர் ஜோசப் மைக்கல்பெரேராவிடம் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.



நேற்று முன்தினம் பாராளுமன்றில் விவாதம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மகேஸ்வரன் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல்கள் மூலம் 2 முறை வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவானார். ஆனால் 3 முறை ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். இது சரியானதா? என அமைச்சர் மகேஸ்வரன் திடீரென கேள்வி எழுப்பியபோது அதற்கு உடனடியாகப் பதிலளிக்க முடியாதுள்ளது எனக்கூறிய சபாநாயகர் இது குறித்து ஆராய்ந்த பின்னர் பதிலளிப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகத் புஷ்பகுமார இது தொடர்பில் ஒழுங்குப்பிரச்சினை கொண்டுவந்தார். அதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்தார். இதனையடுத்து புஷ்பகுமார கூச்சலிட்டுக் கொண்டிருந்தபோது அவரை சபையில் இருந்து வெளியேறுமாறு சபாநாயகர் பணித்தார். இதனையடுத்து எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மேலும் கூச்சலிட்டனர். இதனால் சபை நடவடிக்கைகள் 10 நிமிடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டன. (ச)

## இராசிபலன்

**25.01. 2004**

**(தை 11, ஞாயிற்றுக்கிழமை)**

| | |
|---|---|
| சதுர்த்தி | முற்பகல் 11.40 வரை |
| சதயம் | காலை 6.51 வரை |
| இராகுகாலம் | 5.06-06.36 மணிவரை |
| சுபநேரம் | 9.36-11.06 மணிவரை |

சதுர்த்தி விரதம்

**மேடம்**
பெருமையடைதல், எடுத்த காரியம் கைகூடும், தெய்வசிந்தை, போசன சுகம்.

**இடபம்**
புதிய திட்டமிடல், முயற்சி கைகூடும், விருந்துபசாரம், மேன்மை.

**மிதுனம்**
பிரயாணம், காரியதாமதம், சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு.

**கடகம்**
போசன நன்மை, வீண் தொல்லை, முயற்சி தாமதம், உடல் நலக் குறைவு.

**சிங்கம்**
களஸ்திர நன்மை, எடுத்த கருமங்கள் கைகூடும், உற்சாகம், செல்வாக்கு.

**கன்னி**
பிறர் உதவி, தெய்வ சிந்தை, சுப காரியம், தொழில் சிந்தை.

**துலாம்**
மனச் சோர்வு, காரிய தாமதம், எதிர்பாராத நன்மை, சொத்துக்களால் மனஸ்தாபம்.

**விருச்சிகம்**
காரிய தாமதம், செல்வாக்கு, அதிகாரம், புதிய திருப்பம்.

**தனுசு**
முயற்சி கைகூடும், அந்நியர் உதவி, உற்சாகம், தனவரவு.

**மகரம்**
கற்பனை மிகுதி, காரிய தாமதம், எதிர்பாராத செலவு, கௌரவக் குறைவு.

**கும்பம்**
உறவினர் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, இலட்சுமிகரம்.

**மீனம்**
காரிய அலைச்சல், சயன சுகக் குறைவு, வீண் வார்த்தை, பண விரயம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**
**- வளவன்.**

# புலமைப் பரிசில் கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

தரம்- 5புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவை அதிகரிப்பது குறித்து கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

புலமைப்பரிசில் கொடுப்பனவாகத் தற்போது மாதாந்தம் 240 ரூபா வழங்கப்பட்டுவருகிறது. இக் கொடுப்பனவை 500ரூபா வரை அதிகரிப்பது பற்றியே கல்வி அமைச்சினால் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ள காரணத்தால் தற்போது வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவு மாணவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாக இல்லை என பல முறைப்பாடுகள் கல்வி அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இதையடுத்தே மாதாந்தம் வழங்கப்படும் இப் புலமைப்பரிசில் கொடுப்பனவை அதிகரிப்பது குறித்து ஆராயப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற தரம் 5புலமைப் பரிசு பரீட்சையில் சித்தியடைந்த 10ஆயிரம் மாணவர்கள் இக்கொடுப்பனவைப்பெற தகுதி பெற்றுள்ளனர்.

அந்தந்த கிராம அலுவலர்களின் சிபார்சுகளுக்கு அமைய பிரதேச செயலாளர்களால் இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-18,60)

அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்
-குறள்

வலம்புரி

## சந்திரசேகரனின் முயற்சி வெற்றியளிக்குமா?

தென்னிலங்கையில் சிங்கள அரசியல் கட்சிகள் ஓரணியில் இணைந்து தமது பலத்தை அதிகரித்து வருகின்ற இவ்வேளையில், சிறுபான்மையினமான தமிழ் மக்களும் ஓரணியில் திரளவேண்டிய தேவையும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் இணைவதன் மூலமே இலங்கை அரசியலின் தலைவிதியை மாற்றியமைக்க முடியும். இவ்வாறு அமைச்சர் சந்திரசேகரன் வன்னியில் வைத்து கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்துவிட்டு பத்திரிகையாளர்களிடம் பேசும்போதே தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஒன்று சேருமாறு அமைச்சர் சந்திரசேகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

அமைச்சர் சந்திரசேகரனால் விடுக்கப்பட்ட இவ் அழைப்பு காலத்தின் தேவை கருதிய அழைப்பாகும். அதிலும் மலையகத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் ஒன்று சேரவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருப்பது எமது தமிழ் அரசியல் கட்சிகளுக்குப் பெரியதோர் அடியாகும்.

ஒரு காலத்தில் மலையகத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதில் எமது தமிழ்த் தலைவர்கள் பின்னின்றதுண்டு. ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் மலையக மக்களை நாடற்றவர்களாக்கிய போது, ஈழத் தமிழ்த் தலைவர்கள் மௌனம் சாதித்து மிகப்பெருந் தவறிழைத்தனர்.

ஆனால், இன்று மலையகத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஓரணியில் இணையுமாறு அழைத்திருப்பது மலையகத்தின் பெருந்தன்மைக்குச் சான்றாகிவிட்டது.

அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஓரணியில் சேருமாறு அமைச்சர் சந்திரசேகரன் விடுத்த அழைப்பு பாராட்டுக்குரியதாயினும், அவரின் அழைப்பு - முயற்சி வெற்றியளிக்குமா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

தமிழர்களின் இயல்பு குறித்து ஆராய்ந்த தமிழக அறிஞர் டாக்டர் மு.வரதராசனார், தமிழர்களிடம் போட்டி, பொறாமை, காட்டிக்கொடுப்பு என்பன தாராளமாக உண்டு எனவும், அதுவே இனத்தின் விடிவுக்கு தடையாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

டாக்டர் வரதராசனாரின் கருத்துக்கு அப்போதைய தமிழக அறிஞர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனராயினும், அவரின் கருத்து ஈழத் தமிழர்களின் விடயத்தில் முழுமையான பொருத்தப்பாட்டைக் கொண்டுள்ளது.

காலத்துக்குக் காலம் தமிழர்களிடையே

# மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் விடுதலைப்புலிகள் பேச மாட்டார்கள்

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமானால் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒத்துழைப்பு மிக மிக அவசியமாகும்.

இவ்வாறு அகில இலங்கை தமிழக்காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தனியார் வானொலி நிலையம் ஒன்றுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இக்கருத்தினைத தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் மனோ நிலை தற்போது திருப்திகரமாக அமைந்துள்ளது.

தற்போது அவர்கள் மத்தியில் பூரண சமாதானம் நிலவும் என்ற நம்பிக்கை தோன்றியுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு முழுக்குப்போடும் விதமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டின் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாகியுள்ளது.

அரசின் சமாதான முயற்சிகளைக் கொள்கை அளவில் எதிர்த்து வந்த ஒரு கட்சி அந்த முன்னணியில் இணைந்து கொண்டுள்ளமையால், சமாதான முயற்சிகள் நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அத்துடன் அதன் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது.

சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு எதிராக கடந்த காலங்களில் பாரிய குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தாமாகவே முன்வந்து நீதிமன்றில் சரண் அடைய வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என இப் புதிய முன்னணி எதிர்பார்க்கிறது.

ஆனால் அம்முன்னணியின் தலைமைப்பீடத்தில் நல்லவர்கள் இல்லாதபடியினால் அவர்களால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளும் பயனளிக்காது.

இவ்வாறான குணமுடையவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியுமா ? அல்லது அவர்கள் தான் பேச முன்வருவார்களா ?

### ஜனாதிபதி தவறுகிறார்

ஜனாதிபதி பதவியை வகிக்கும் சந்திரிகா குமாரதுங்க சிறிய வட்டத்தினுள் கட்சி ஒன்றின் தலைவர் என்ற நிலைப்பாட்டிலேயே சிந்தித்து செயற்பட்டுவருகிறார். இவரது இந்நிலைப்பாடு மக்களுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் பொறுப்புவாய்ந்த ஜனாதிபதி என்ற வகையில் கட்சி அரசியலையும், கட்சி நலன்களையும் புறந்தள்ளிவிட்டு தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆனால் அத்தகையதொரு சூழ்நிலை காணப்படவில்லை.

### சமாதானத்துக்கு முழுக்கு

என்னைப் பொறுத்த மட்டில் இக் கூட்டணி மூலம் சமாதான முயற்சிகள் யாவும் குழி தோண்டி புதைக்கப்பட்டு விடும் என்றே நான் கருதுகின்றேன்.

ஒருவேளை இக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அந்த முன்னணியுடன் நிச்சயமாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் சமாத்தானப் பேச்சுக்களை நடத்த மாட்டார்கள் என நம்புகிறேன்.

சமாதான முயற்சிகளை முற்றாக எதிர்க்கும் ஒரு கட்சி

இருந்து புலனாகியுள்ளது. மாறாக சமாதான முயற்சிகள் அல்லாத வேறொரு நோக்கத்துடனேயே இந்த முன்னணி அமைக்கப்பட்டுள்ளது.

திம்புக் கோட்பாடுகளுக்கு அமைவான தீர்வுத் திட்டத்தை தவிர வேறு எதனையும் வலியுறுத்தப் போவதில்லை என தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றனர்.

இந்த தீர்வுத் திட்டத்தை முன்னணி நிராகரித்தால், அக் கட்சியுடன் பேச்சுக்களை நடத்துவதில் எந்தவித அர்த்தமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-61)

## பொதுஜன ஐக்கிய முன்னணி சிதறுண்டு செல்லும் சாத்தியம்

(கொழும்பு)

தீவிர இடதுசாரிகளான ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேர்ந்தது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணிக் கூட்டுக் கட்சிகளிலிருந்தே விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அங்கத்துவ கட்சிகளான சிறிய் அரசியல் கட்சிகள் ஜே.வி.பி யுடனான கூட்டணி தொடர்ந்தும் நிலைக்காது என்றும் இரு தசாப்த காலங்களாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு இது தீர்வைத் தராது என்றும் எதிர்வு கூறியுள்ளன.

இவ் ஒப்பந்தம் பயனற்றது. நாட்டின் முக்கிய பிரச்சினைகள் பற்றி இதில் குறிப்பிடவில்லை என லங்கா சமசமாஜக் கட்சிச் தலைவர் பட்டி வீரக்கோன் கூறியுள்ளார்.

முக்கிய பிரச்சினைக்குத் தீர்வின்றி நாடு சுமுகமாக இயங்கமுடியாது. கடந்த செவ்வாயன்று நடைபெற்ற உடன்படிக்கையின்படி சுதந்திரகட்சிக்கும் ஜே.வி.பி க்குமிடையே இனப்பிரச்சினைத் தீர்வுபற்றி பாரதூரமான வேறுபாடுகள் தென்படுகின்றன என்று அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

இதன் காரணமாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இக்கூட்டில் இருந்து வெளியேறும் சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-6)

## இந்திய மீனவரின் அத்துமீறல்கள் குறித்து ஜனாதிபதிக்கு மாவை எம். பி. கடிதம்

(கொழும்பு)

இந்திய மீனவர்கள், இலங்கையின் வட பகுதிக் கடலிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து தொழில் செய்வதால் வட பகுதி மீனவர்கள் அனுபவித்துவரும் துன்பங்களை விபரித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினா மாவை சோ.சேனாதிராஜா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

22.01.2004 திகதியிடப்பட்ட அந்தக் கடிதத்தில்,

வடபகுதியில் உள்ள எமது ஆள்புல எல்லைக்குட்பட்ட கடற்பிரதேசங்களான யாழ். மாவட்டத்தின் வடமராட்சிக் கடல், மன்னார் மாவட்டத்தின் இரணைமடுக்கடல் ஆகியவற்றில் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து எமது கடற் செல்வங்களை சூறையாடிச் செல்வது அன்றாட அலுவலாகிவிட்டது.

அனேக சந்தர்ப்பங்களில் இப்படியான இந்திய மீனவர்கள் படகுகள் சகிதம் கைது செய்யப்பட்டு சில நாட்கள் சென்றபின் அவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிப்பது வழக்கமான நடைமுறையாக உள்ளது.

இந்திய மீனவர்களது அத்துமீறல் நடவடிக்கைகளால்

காலத்துக்குக் காலம் தமிழர்களிடையே தோன்றிய அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் என்பன தங்களுக்குள் ஒற்றுமைகாண முடியாமல் துன்பங்களையே மக்களுக்குக் கொடுத்தன.

அரசியல் கட்சிகள் என்ற வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், சுயாட்சிக் கழகம் என ஒவ்வொரு கட்சிகள் ஒன்றை ஒன்று தூற்றி, கழுத்தறுப்பதில் ஈடுபட்டன. ஒரு கட்சியை வீழ்த்த வேண்டும் என்பதற்காக சிங்கள ஆட்சிகளுடன் சேர்ந்து நின்றவர்களும் உண்டு.

இப்படியே தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி இருந்ததினால் சிங்கள இனவாதிகள் அப்பாவித் தமிழ்மக்களை அடக்கி- ஆண்டு ஆக்கிரமிப்புச் செய்தனர். தமிழ் மக்களின் உடைமைகள் சூறையாடப்பட்டன. அவர்களின் உயிர்கள் உறிஞ்சப்பட்டன. எனினும் தமிழ்க் கட்சிகள் ஒன்றுசேரவில்லை. அன்று தமிழ்க் கட்சிகளுக்குள் ஒற்றுமை இருந்திருந்தால் இன்று வாழ வேண்டிய இளைஞர்கள் தங்கள் இன்னுயிரை இழக்க வேண்டிய தேவை ஏற்பட்டிராது. சரி, கடந்தவை கடந்துவிட்டன. புதியனவற்றிலாவது ஒற்றுமை ஏற்படும் என்றால் தமிழ்க் கூட்டமைப்புக்குள்ளேயே குத்துவெட்டுக்கள், சம்பந்தர் ஒரு புறம் விநாயக மூர்த்தி மறுபுறமும் கூட்டமைப்பு வெறும் பெயரளவிலேயே அன்றி உள்ளார்ந்தமானதல்ல. இதுதான் பழைய பகைமைகளின் பிரட்டல் கள் என்றால் சங்கரி - ரவிராஜ் - மாவை என்ற கூட்டணியின் நவகால மன்னர்கள் முட்டி மோதுகிறார்கள். அப்படியானால் அமைச்சர் சந்திரசேகரனின் முயற்சி எப்படி வெற்றி தரும்?

சமாதான முயற்சிகளை முற்றாக எதிர்க்கும் ஒரு கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த விடுதலைப்புலிகள் விரும்ப மாட்டார்கள் .

சமாதானச் செயற்பாடுகள் குறித்து தெளிவான புரிந்துணர்வும், உடன்பாடும் புதிய முன்னணிக்கு இல்லாத விடத்து அது சாத்தியப்படாது.

சமாதானத்தைக் கருத்தில் கொண்டு இம் முன்னணி உருவாக்கப்படவில்லை என்பது அதன் செயற்பாடுகளில்

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எல்லா யோகங்களும் வேறுபாடில்லாமல் மனிதனை விடுதலையை நோக்கியே அழைத்துச் செல்கின்றன. இங்கே விடுதலை என்று குறிப்பிடுவது-முழுமையான விடுதலையாகும். தீமையின் பிடியிலிருந்தும், அதுபோலவே நன்மையின் பிடியிலிருந்தும் முழுக்க முழுக்க விடுதலை பெற வேண்டும். ஓர் இரும்புச் சங்கிலி எப்படி விலங்கோ, அப்படியே தங்கச் சங்கிலியும் நமக்கு விலங்குதான்.

**சுவாமி விவேகானந்தர்**

இந்திய மீனவர்களது அத்துமீறல் நடவடிக்கைகளால உள்ளூர் மீனவர்கள் தங்களது ஒரேயொரு தொழிலான மீன்பிடியை மேற்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இந்திய மீனவர்களால் அவர்களது படகுகள், வலைகள் முதலியவற்றுக்கு ஏற்படும் சேதங்கள், நேரடித் தாக்குதல்கள் குறித்து அச்சமடைந்தவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

இந்திய மீனவர்களால் எமது பிராந்தியத்தின் செல்வம் சூறையாடப்படுவதுடன், உள்ளூர் மீனவர்களின் அன்றாட ஜீவனோபாயமும் பாதிக்கப்படுகின்றது.

இதுவரை 420 கோடிக்கும் அதிக பெறுமதியுடைய எமது வளங்கள் அந்நிய மீனவர்களால் சூறையாடப்பட்டுள்ளன.

இவ்வாறான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையிட்டு இலங்கைக் கடற்படை கண்மூடிக் கொண்டிருப்பது எமக்கு கவலையும் ஏமாற்றமும் அளிப்பதாக உள்ளது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்ட எமது மீனவர்களின் இன்னல்களைப் போக்க தங்களால் இயன்ற நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

## பொன் விழாப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில சைவசமய அபிவிருத்திக் கழகம், அதன் பொன்விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பல போட்டிகளை நடத்தவுள்ளது.

இந்தவகையில், தரம்-7ற்கு சமய நாடகப் போட்டியும் தரம்-8ற்கு திருமுறை மனனப் போட்டியும் தரம்-10ற்கு புராணபடனப் போட்டியும் தரம்-11ற்கு பண்ணிசைப் போட்டியும் தரம்-12ற்கு கதாப்பிரசங்கப் போட்டியும் இடம் பெறவுள்ளது.

இவற்றுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னராக தத்தமது பாடசாலை ஊடாக மாணவர்கள் அனுப்ப முடியும் என கழகச் செயலாளர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.

(உ)

## நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீகாயத்ரி காமகோடி பீடத்தின் கமலா பெண்கள் குருகுலம், வரத ராஜ ஆண்கள் குருகுலம் ஆகியவற்றின் முதலாம் ஆண்டு நிறைவு விழா இன்று இடம்பெறவுள்ளது. (உ)

## தமிழ்க்கட்சி...

களிடம் இருக்கிறது. அதனை நீங்கள் செய்யுங்கள் அதில் நீங்கள் ஓரளவுக்காவது வெற்றிபெற்றால் மேலதிகமாக அவர்களுடன் பேசுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோமென விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இதேவேளை மலையகத் தமிழ்க் கட்சிகள் ஓரணியில் செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் அதற்கான அழைப்புக்களை நாம் விடுத்துள்ளோம்

இவ்வாறு சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார். (து)

## அன்புவார ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில், இன்று 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்புவார ஒன்று கூடல் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீ சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழுத் தலைவர் ஆர்.வசந்தசேனன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்புரைகளை பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம், ஆசிரியர் என்.விஜயசுந்தரம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள், அன்புவாரக் கட்டுரை, கவிதைப் போட்டிகளில் பங்குபற்றியோர்க்குப் பரிசு வழங்கல் ஆகியன இடம் பெறவுள்ளன. (உ)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் சங்கத்தின் 15 வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று மு.ப. 10.30 மணிக்கு சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலய கேட்போர் கூடத்தில் சங்கத் தலைவர் நா.தண்டாயுதபாணிதலைமையில் நடைபெறவுள்ளது. (உ-51)

## இனவாதி...

ளுக்குப் புத்திபுகட்டி நல்வழிப் படுத்துவதற்கு பௌத்த பிக்குகள் முன்வர வேண்டும் இதன் மூலம் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் பேணுவதுடன் பொருளாதார சுபீட்சத்தையும் ஏற்படுத்த முடியுமென்றும் சங்கநாயக்கர் மேலும் தெரிவித்தார். (ம)

## இந்திய...

வின் விசேட செய்தியுடன் புதுடில்லி சென்றுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட அங்கு வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் பிரவேஷ் மிஸ்ரா ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இக் கலந்துரையாடல்களின் போது தென்னிலங்கை அரசியலில் தோன்றியுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பாக இந்தியத் தலைவர்களிடம் அமைச்சர் மிலிந்த விளக்கிக் கூறியிருப்பதாகப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை அமைச்சர் மிலிந்த மொறகொட இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் காணப்பட்டுவரும் மிக நீண்டகாலமான உறவுகள் குறித்தும்; இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலோசனைகளின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கருத்துக்களை இந்தியத் தலைவர்களுக்கு அமைச்சர் மிலிந்தமொறகொட விளக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க, இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா மீண்டும் தலையிட ஆரம்பித்துள்ள நிலையில் இலங்கைத் தலைவர்கள் மாறி, மாறி இந்தியா சென்று இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி வருவது இலங்கை அரசியலில் குறிப்பிட்ட அளவு மாற்றத்தை ஏற்படுத்திவருவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

## இனப்பிரச்சினையை...

அத்துடன் உலக பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டை தயார் செய்யவும் உதவும்.

மேலும் நாட்டின் பிரச்சினைக்கு பேச்சு மூலமான தீர்வைக் காண வேண்டுமென்பதையே நான் என் அரசியல் வாழ்வு முழுவதும் கூறி வருகின்றேன். இப்பிரச்சினைக்குப் போர் சரியான தீர்வு அல்ல என எமது கூட்டணி விளங்கிக் கொண்டுள்ளது. ஆயினும் பிரதமரின் சமாதான முயற்சிகள் தொடர்பில் எமது கூட்டணி சில ஆட்சேபங்களை கொண்டிருக்கின்றது. இருப்பினும் வடக்குக் கிழக்கின் புனரமைப்புப் பணிகள் பொது ஜன ஐக்கிய முன்னணியினாலேயே ஆரம்பிக்கப் பட்டது என்றும் ஜனாதிபதி கூறினார். (த-6)


தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்க கட்டட திறப்பு விழாவும்
கௌரவ இந்து கலாசார அமைச்சருக்கான
பாராட்டு விழாவும்



காலம்: இன்று (25.01.2004) பி.ப. 3.00 மணி

பிரதம விருந்தினர்:
கௌரவ தி.மகேஸ்வரன்
(இந்து கலாசார அமைச்சர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு.வே.சாம்பசிவம் (உதவி அரச அதிபர் காரைநகர்)
திரு.க.அழகேந்திரம் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
திரு.S.இராசதுரை (கிராம அலுவலர் காரை. கிழக்கு)
திரு.க.கனகசபாபதி (கிராம அலுவலர் காரை. கிழக்கு)
திருமதி க.பாலாம்பிகை (கிராம அலுவலர் காரை. தெற்கு)

அனைவரும் வருக

கிராம மக்கள்.
கிராம அபிவிருத்திச் சங்கம்
தோப்புக்காடு. காரைநகர்.

(8165)





PILLIAR INN GARDEN RESTAURANT

மலர்ந்த புத்தாண்டில் மக்களுக்கு பல சேவைகளை வழங்கவுள்ளார்கள் பிள்ளையார் காடின் றெஸ்ரோறன்ஸ்

- காலை உணவு
- மதிய உணவு
- இரவு உணவு
- சிக்கின் புரியாணி
- சப்பாத்தி
- தண்டூரி சிக்கின்
- ஆட்டாமா பிட்டு
- குரக்கன் பிட்டு
- கடல் உணவு
- பரோட்டா

- குளிர்ந்த பியர் (*Chiled Beer*)
- கொக்ரெயில்ஸ் (*Cocktails*)

➢ விசேட வைபவங்களுக்கு உங்கள் இடத்துக்கு வந்து உணவு



திங்கள், வியாழன் தோறும்
உங்கள் வலம்புரியில்
விவாத அரங்கு
கருத்துச் சங்கமம்

மாணவர்களின் கல்வி
வீழ்ச்சிக்குக் காரணம்

✯ஆசிரியர்களா?
✯மாணவர்களா?
✯பெற்றோர்களா?

மாணவர்களே காரணமென சாடுகிறார் ஜெஸ்ரின்
உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன



The Royal College of Jaffna

கணித ஆசிரியர் தேவை

9ம், 11ம் ஆண்டு மாணவர்களுக்கு சனி, ஞாயிறு 12ல் இருந்து 2 மணி வரை. சம்பளம் மணிக்கு 40/= + பிரயாணச் செலவு. தலைமை ஆசிரியர் 426


## கண்ணீர் அஞ்சலி



**அமரர் வைத்திலிங்கம் பூதத்தம்பி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நவாலி தெற்கு 8 ஆம் இலக்க கிளைக்குழுத் தலைவராகவும். பொதுச்சபை உறுப்பினராகவும் பணியாற்றியதுடன் மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தின் தலைமைக்கு வித்திட்ட நீண்டகாலக் கூட்டுறவாளரான வைத்திலிங்கம் பூதத்தம்பி அவர்களின் மறைவையொட்டி மனம் நெகிழ்ந்து உதிர்க்கும் கண்ணீர் அஞ்சலியை அன்னாரின் குடும்பத்தினருக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு"


கண்ணீருடன்,

மா.செல்வராசா, க.செல்வராசா (செல்வம்), ச.கந்தசாமி, மா.மகாலிங்கம், இ.வன்னியசேகரம்

மானிப்பாய்

(சி-7306)

## மரண அறிவித்தல்



- விசேட வைபவங்களுக்கு உங்கள் இடத்துக்கு வந்து உணவு வகையறாக்கள் தயாரித்துக் கொடுக்கப்படும்
- உணவுகள் சிற்றுண்டிகள் பார்சலாக தரப்படும்.
- முன்கூட்டிய ஓடர்களுக்கு வீட்டுவாசலில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.
- குளியலறையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள்.
- உங்கள் பயண நலன்கருதி குளிரூட்டப்பட்ட வாகனம்.
- இருந்த இடத்திலிருந்தே லைன்ஏயர் (**Lion Air**), எக்ஸ்போ ஏவியேசன் (**Expo Aviation**) விமான பயணச் சீட்டுக்கள்



**போன்ற அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய இடம்.**

*T.P. - 021 222 5595*
*T.P. - 021 222 2829*
*Fax - 021 222 5595*
*E-mail - Piyarinn@sltnet.lk*
*Website - WWW.Pillaiyarinn.com*

**பிள்ளையார் இன் (*Stores*)**
**31. மானிப்பாய் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

[C/7189]

சனி, ஞாயிறு 12ல் இருந்து 2 மணி வரை. சம்பளம் மணிக்கு 40/= + பிரயாணச் செலவு. தலைமை ஆசிரியர் 426 (302), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். *(நேரில் வரவும்)* (8164)

# பிரத்தியேக வகுப்புக்கள்

## A/L - 2005/2006

கணக்கீடு - ***ப. கணேஸ்***
*(B.com, Dip.in.pub.Adm)*


வணிகக் கல்வி - ***அ. ஆனந்தன்***
*(B.B.A.Hons, Dip.in.Edu)*

ஆரம்பம் - 02.02.2004 பி.ப. 4 மணி

தொடர்பு:-

**விக்கினேஸ்வரா கல்வி நிலையம்.**
**பொற்பதி வீதி, கொக்குவில்**

(C/7196)



# சின்னையா கனகசபை (றீகல்)

## (றீகல் சவுண்ட்ஸ் அன்ட் றீகல் வீடியோ உரிமையாளர்)

ஈச்சமோட்டை கடற்கரைவீதியைச் சேர்ந்த "றீகல்" எனச் செல்லமாக அழைக்கப்படும், சின்னையா கனகசபை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், நாளை திங்கட்கிழமை (26.01.2004) காலை 10.00 மணிக்கு, ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக, துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/7. கடற்கரை வீதி.
ஈச்சமோட்டை.
யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

*(8166)*

# YOGI BEAUTY PARLOUR

(Academy of Beauty Culture & Hair Dressing)

## HOME SCIENCE ACADEMY

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் 30-01-2004 முதல் ஆரம்பமாகவுள்ளது

1) அழகுக் கலையும் சிகிச்சை முறைகளும் (Beauty Culture and Therapy)
2) முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும்
3) இலகு வழித் தையல், கேக் ஐசிங், மேலைத்தேய ஐசிங் அலங்காரமும் அலங்காரமும் (Fondant Structures and Suger Flowers) மாச்சீனி மலர் தயாரித்தல், துணியில் வர்ண அலங்கரிப்பு, கிறிஸ்டல் அழகு பொருள்கள் செயற்கை மலர் அலங்காரங்கள் (Flower Making and Bouquet Making)

இதில் பாடக் குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும்.

சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்

**75 அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) T.Phone : 222 2796**

C/7307

# விநியோகஸ்தர்கள் தேவை

பத்திரிகை விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை. சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் (காப்புறுதி, வரிப்பத்திரம் இருத்தல் அவசியம்) 25.01.2004 இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நேரில் வரவும்.

யாழ். நகரத்தை அண்மித்திருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி
யாழ்ப்பாணம்.

**நிர்வாக உத்தியோகத்தர்.**

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.